## அ. சீனிவாசன் – நூலாசிரியர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள்

❖ 1. பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி

❖ 2. பாரதியின் புதிய ஆத்திசூடி – ஒரு விளக்கவுரை

❖ 3. சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துக்கள்

4. சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும்
(சென்னை பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு)

5. பாரதியின் தேசீயம்

❖ 6. கம்ப நாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும்

7. கல்யாணராமனும் பரசுராமனும்

அச்சில் உள்ளவை:

❖ 1. கம்பன் ஒரு சமுதாயப் பார்வை

2. ஆழ்வார்களும் பாரதியும்

3. கம்பன் காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும்

### விரைவில் வெளிவர இருப்பவை

1. ஸ்ரீராமனும் கோதண்டமும்

2. பாரதியும் பகவத் கீதையும்

3. பாரதியின் உரைநடை

4. கிராமப் புறங்களை நோக்கி

5. இந்திய பொருளாதார சிந்தனைகள்

### நூல்கள் கிடைக்குமிடம்:


கர்ம யோகி பதிப்பகம்
அ சீனிவாசன் நூலாசிரியர்/பதிப்பாளர் வெளியீடு
நெ.6, யாதவா 2–வது கிராஸ் தெரு
விருகம்பாக்கம், சென்னை – 600 092
தொலைபேசி – (044) 23760467, (செல்) 31163617.


❖ *குறிப்பிட்டவை தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் மூலம் உதவி பெற்றவை.*

# கல்யாணராமனும் பரசுராமனும்

நூலாசிரியர்

அ. சீனிவாசன்

பதிப்பாளர்:

கர்மயோகி பதிப்பகம்

அ. சீனிவாசன்
நூலாசிரியர்/பதிப்பாளர்
நெ.6, பாரதவா 2வது கிராஸ் தெரு
விருகம்பாக்கம், சென்னை – 600 0092
போன் : (044) 2376 0467

நூலின் பெயர் : கல்யாணராமனும் பரசுராமனும்

ஆசிரியர் : அ. சீனிவாசன்

மொழி : தமிழ்

வெளியீட்டெண் : முதல் பதிப்பு

ஆண்டு : 2004

தாள் : 16 கே.ஜி. மேப் லித்தோ

நூல் அளவு : 1/8 டெம்மி

விலை : ரூ.30/–

உரிமை : ஆசிரியருக்கே

வெளியீடு : அ. சீனிவாசன்
நூலாசிரியர்/பதிப்பாளர்
நெ.6, யாதவா 2–வது கிராஸ் தெரு
விருகம்பாக்கம், சென்னை – 600 092
போன் : (044) 2376 0467

அச்சுவடிவமைப்பு : வி.எஸ். சாமிநாதன்
156 ராதாநகர் மெயின் ரோடு,
குரோம்பேட்டை,
போன் # 2265 2294

அச்சிட்டோர் : ஆப்செட் முறையில் அச்சிட்டோர்

# கல்யாணராமனும் பரசுராமனும்

நூலாசிரியர் : அ. சீனிவாசன்

## பொருளடக்கம்


❖ முன்னுரை

1. தோற்றுவாய்

2. கம்பன் இயற்றிய கடவுள் வாழ்த்துப்பாடல்

3. கம்பராமாயணத்தின் பன்முகச் சிறப்புகள்

4. மாமுனிவர்களின் சந்திப்பு

5. பரசுராமாவதாரம்

6. க்ஷத்திரிய நாசம்

7. யுகசந்திப்பு

8. நிறைவுரை

❖ நூலாசிரியரைப்பற்றி

# கல்யாணராமனும் பரசுராமனும்

## முன்னுரை :

பாரதபூமி பழம்பெரும் பூமி
நீரதன் புதல்வர் அந்நினைவகற்றாதீர்

என்பது மகாகவி பாரதியாரின் வாக்கு. பாரத பூமியின் கலாச்சாரப் பெருமைகளும் நாகரிகச் சிறப்புகளும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியவை. அதன் தொடக்கத்தைக் காண முடியவில்லை. பாரத பூமி படைத்துள்ள சாத்திரங்களும், வேதங்களும், தத்துவ நூல்களும், நீதி நூல்களும் அறநூல்களும், அறிவியல் நுல்களும், இதிகாசங்களும் புராணங்களும் பொருள் நூல்களும் சமூகவியல் நூல்களும் அவைகளில் தமிழ் பங்களிப்பான சங்க நுல்களும், காப்பியங்களும், அறநூல்களும் திருமுறைகளும் திவ்யப்பிரபந்தங்களும், இதர பக்தி இலக்கியங்களும், மற்றும் வைத்தியம், மருந்தியல், சிற்பம், இசை, காவியம், ஓவியம் முதலியவை பற்றிய அறிவியல் தொழில் நுட்ப நூல்களும் அறிவுக் களஞ்சியங்களாகும். அவைகள் எல்லாம் இடைக்காலத்தில் மறைக்கப்பட்டும் தடுக்கப்பட்டும் இருந்தன. அவைகளை நாம் அறிந்து கொள்ள முயல வேண்டும். அவைகளில் நாம் பெருமை கொள்ள வேண்டும். அவைகளைப் பற்றிய புதிய ஆராய்ச்சிகளைச் செய்து அபிவிருத்தி காணவேண்டும்.

தமிழகத்தின் தலைசிறந்த சிற்ப சாஸ்திர மேதை உயர்திரு. கணபதி ஸ்தபதியார் அண்மையில் தொலைக்காட்சியில் சிற்ப சாஸ்திரம் பற்றி உரையாற்றியதை நான் கேட்க நேர்ந்தது. அதன் பின்னர், அவரிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கருதி தொலைபேசியில் பேசினேன். அவர், நமது நாட்டில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, சிற்ப சாஸ்திரம் ஒரு மிகப் பெரிய அளவிலான வகையில் அறிவியல் தொழில் நுட்பசாத்திரமாக வளர்ச்சி பெற்றிருந்தது என்றும், நமது மக்கள் சிற்பத்தை ஒரு

கலைப்பிரிவாக மட்டுமே காண்கிறார்கள் என்றும், அது உண்மையில் ஒரு மிகப் பெரிய அளவில் வளர்ச்சி பெற்றிருந்த அறிவியல் தொழில் நுட்பத் துறையாகக் காணவேண்டும் என்றும், அதற்கான செய்திகளைக் கொண்ட பல நூல்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் உள்ளனவென்றும் கூறினார். அத்துடன் விஸ்வகர்மா முதல் தொடர்ச்சியாகத் தலைமுறை தலைமுறையாக வாழையடி வாழையாக இந்தத் துறையில் பெரிய பல அறிவியல் மேதைகளும் இருந்து வருகிறார்கள் என்றும் கூறினார். இது போலவே இதர பல துறைகளிலும் வைத்தியம், மருந்தியல், கல்வித்துறை, உயர்கல்வி, வானவியல், கணிதம், காலக் கணிதம், ஜோதிடம், நீரியல், மண்ணியல், தாவரவியல், விலங்கியல், சமுத்திரவியல், பஞ்சபூத செயல்பாடு, ஓவியம் இசை, இசைக் கருவிகள், நாட்டியம், முதலிய பலவேறு துறைகளும் விஞ்ஞான தொழில் நுட்பமாகவும் அருங்கலைகளாகவும் நமது நாட்டில் வளர்ச்சியடைந்து வந்திருக்கின்றன. இவைகளைப் பற்றியெல்லாம் நமது பல்கலைக் கழகங்களும், அறிவியல் தொழில் நுட்ப ஆய்வுத் துறைகளும், அறிவியல் தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களும் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இராமாயணப் பெருங்கதையில் சுந்தர காண்டத்தில், அனுமன், இலங்கையில் சீதையைக் கண்டுபிடித்துப் பேசிவிட்டுத் திரும்பிய போது, இலங்கையில் சாலைகளை சேதப்படுத்தியும், தன்னை எதிர்த்த பல அரக்கர்களைப் போரில் கொன்றும், பின்னர் இராவணனை அவனுடைய சபா மண்டபத்தில் சந்தித்தும் தூது பேசியும் திரும்பியபோது, அவனுடைய வாலில் இட்ட நெருப்பின் மூலம் இலங்கையை எரித்த செய்தி விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

அனுமன் இட்ட நெருப்பினால் சேதப்பட்ட இலங்கையை முன்னைக் காட்டிலும் அழகாக விஸ்வகர்மயன் மூலம் இராவணன் புனர்நிர்மாணம் செய்ததாகக் கம்பராமாயணச் செய்திகள் கூறுகின்றன.

மேலும், இராமாயணப் பெருங்கதையில் வானரத் தலைவர்களில் ஒருவனான சிறந்த தொழில் நுட்பஞானம் மிகுந்த நளன் என்னும் வானரத்தச்சன் தலைமையில் சேது அணை கட்டப்பட்டது பற்றியும்,

மற்றும் சஞ்சீவி மலை அதன் அபூர்வமான மருத்துவ குணம் படைத்த மூலிகைகள் பற்றிய செய்திகளும் விமானங்கள் பற்றிய செய்திகளும் கிடைக்கின்றன.

இவ்வாறு பண்டைய காலத்தில் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பாரத நாட்டில் அறிவியல் தொழில் நுட்பமும் வளர்ச்சி பெற்றிருந்தது. அதில் தமிழகமும் தனது சிறப்பான பங்கை ஆற்றியிருக்கிறது. அதற்கு நமது பெரும் திருக்கோயில்களும், கோபுரங்களும், சிற்பங்களும் நமது பண்டய ஓவியங்களும், கல்லணைகளும் நீர்நிலைகளான ஏரிகளும், குளங்களும் அவைகளின் வரத்துக் கால்களும் வடிகால் முறைகளும் கடல் துறைகளும் தக்க சான்றுகளாகும்.

பாரதத்தின் நீண்ட நெடும் பாரம்பரியத்திற்கும் வளர்ச்சிப் பாதைக்கும், கலாச்சார வளர்ச்சிக்கும் அமைதியான வாழ்க்கைக்கும் செல்வச் செழிப்பிற்கும் தடையாகக் கடந்த ஆயிரம் ஆண்டுகளாக ஏற்பட்ட படையெடுப்புகள், கொள்ளைகள், ஆக்கிரமிப்புகள் அன்னிய ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மை கொடுமைகள் காரணமாக பாரத சமுதாயத்தில் ஏற்பட்ட கடுமையான சேதங்களுக்கு அளவே இல்லை.

அத்தகைய கொடுமைகளுக்கு எதிராக இந்த நாட்டு மக்கள் பலமான எதிர்ப்பு கொடுத்த போதிலும், அவ்வப்போது ஏற்பட்ட க்ஷத்திரிய நாசங்கள் காரணமாக ஏற்பட்ட பலவீனத்தின் விளைவாக அந்நிய ஆட்சிகள் பாரதத்தில் சில காலம் நிலைத்துவிட்டது.

அதன் பின்னர் ஏற்பட்ட ஆங்கிலேயர் ஆட்சியும் அவர்களுடைய தந்திரங்களும், கொள்ளைகளும், போர்களும், போர் கொலைகளும் நமது நாட்டில் பெரும் அளவில் நாசங்களை ஏற்படுத்திவிட்டன. பல லட்சக் கணக்கான மக்கள் போர்களினாலும், பஞ்சத்தினாலும், செத்து மடிந்தார்கள். நமது நாட்டுத் தொழில்கள் நீர் நிலைகள், விளை நிலங்கள் கோவில்கள், கல்விமுறை கலாச்சாரம் ஆகியவைகளெல்லாம் பெரும் அளவில் சேதமடைந்தன. ஆங்கிலேயேர்கள் நடத்திய ஆட்சியும் நிர்வாக முறையும், அவர்கள்

புகுத்திய ஆங்கிலக் கல்வி முறையும் நமது நாட்டிற்கு பெரும் கேடுகளை விளைவித்தன.

ஆங்கிலேய அந்நிய ஆட்சியாளர்களையும் அவர்களுடைய ஆக்கிரமிப்புகளையும் நமது நாட்டு மக்கள் எதிர்த்த போது ஆங்கிலக்கல்வியாளர்கள், தங்கள் கல்வி நிலையங்கள் கல்விச் சாலைகள், கல்லூரிகள், பாடத் திட்டங்கள் மூலம் நமது நாட்டு வரலாற்றையே புரட்டிக் கூறி, நமது நாட்டில் உள்ள அனைவருமே வெளியே இருந்து வந்த அன்னியர்கள்தான் என்றும், நமது வரலாற்றியலில் ஒரு கதையைக் கட்டிவிட்டு நமது நாட்டின் ஆங்கிலப்படிப்பாளிகளிடம் அந்தக் கட்டுக்கதை வரலாற்று விஷவித்துக்களை விதைத்து விட்டார்கள்.

ஆசிரியா போன்ற நாடுகளிலிருந்து போலன் கணவாய் வழியாக திராவிடர்கள் இந்தியாவிற்குள் வந்து குடியேறி சிந்து சமவெளி நாகரிகத்தை உண்டாக்கினார்கள் என்றும், கைபர் கணவாய் வழியாக ஆரியர்கள் இந்தியாவிற்குள் வந்து திராவிடர்களைத் தெற்கே விரட்டிவிட்டு அவர்கள் வடக்கே குடியேறினார்கள் என்றும், பின்னர் கிரேக்கர்கள் இந்தியா மீது படையெடுத்தார்கள் என்றும் அதன் பின்னர் மேற்கு ஆசியாவிலிருந்து சுல்தான்கள் படையெடுத்து, டில்லியில் சுல்தான் ஆட்சி ஏற்பட்டது என்றும், பின்னர் மொகலாயர்கள் படையெடுத்து தங்கள் ஆட்சியை இந்தியாவில் நிறுவினார்கள் என்றும், பின்னர் ஐரோப்பியர் வருகை ஏற்பட்டு ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட்டது என்றும், இவ்வாறு இந்த நாடு அதுவரை ஒற்றுமையின்றி பலவேறு இந்து, முஸ்லீம் மன்னர்கள் நாடுகளாக சண்டையிட்டுக் கொண்டு சிதைந்து கிடந்தது என்றும் ஆங்கிலேயர்கள் வந்து தான் தங்கள் ஆட்சி மூலம் இந்த நாட்டை ஒற்றுமைப் படுத்தினார்கள் என்றும் நாகரிகமில்லாத இந்திய மக்களை நாகரிகப் படுத்தினார்கள் என்றும் கூறிக் கொண்டு இந்து முஸ்லிம் சண்டைகளையும், ஆரிய திராவிட இனவாதங்களையும் உண்டாக்கி இந்திய மக்களிடையில் குறிப்பாக படித்தவர்கள் ஒரு பகுதியினரிடையில் விஷக்கருத்துக்களை விதைத்து விட்டார்கள். அந்த விஷ விதைகளின் தீய விளைவுகள் பெரும்பாலும் பாரத மக்களால் நிராகரிக்கப்பட்டு வந்தபோதிலும், இன்னும் சில எச்சங்கள்

நீடித்து வருகின்றன. சில பெரிய மனிதர்கள் இன்னும் கைபர் கணவாய் என்றும் ஆரிய திராவிட இனவாதம் பேசி வருகிறார்கள். அந்த அறியாமைக் கருத்துக்களை அகற்றவேண்டியது அவசியமாகும்.

இத்தகைய ஆங்கில சிந்தனையாளர்களின் பிரிவினைக் கருத்துக்கள் எல்லாம் இன்று காலம் கடந்து போய் பொய்யாகி மறைந்து வருகின்றன. இன்று பாரதத்தின் ஒற்றுமை ஒன்றிணைப்பு என்னும் கருத்துக்களே வெற்றி பெற்று மக்களிடம் ஆழப்பதிந்து வருகின்றன.

பாரத தேசத்தின் நீண்ட வரலாறும் பாரம்பரியமும் கலாச்சாரமும் பற்றிய தெளிவான விவரங்களும் உண்மைகளும் வெளிப்பட்டு வருகின்றன. நமது நீண்ட வரலாற்றில் சில மேடுபள்ளங்கள் இருந்திருக்கின்றன. மகாகவி பாரதி மிகவும் அற்புதமாக நமது நாட்டின் ஒரு பாரம்பரிய உண்மையை தனது பாடல் வரிகளில் மி கவும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார்.

"நல்லறம் நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரிவாள் எங்கள் தாய் – அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடுவாள்"

என்று நமது பாரத அன்னையின் குணம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இந்த அருமையான சொற்களை நாம் நூறாயிரம் தடவைகள் ஆனாலும் படித்து அவைகளை நமது மனதில் பதியவைத்துக் கொள்ள வேண்டும். பாரத மக்களிடம் இச்சீரிய கருத்தை விரிவாகப் பரப்பவும் வேண்டும்.

அறம்வெல்லும் பாவம் தோற்கும் என்பதும், துஷ்டநிக்ரக, சிஷ்ட பரிபாலன, அதாவது தீயோரை மாய்த்து நல்லோரைக் காப்பது என்பதும் நமது நாட்டின் தெய்வீகக் குரல்களாகும்.

"*பாரதா, எப்போதெப்போது தர்மம் அழிந்துபோய் அதர்மம் எழுச்சி பெறுமோ, அப்போது நான் என்னைப் பிறப்பித்துக் கொள்கிறேன்*".

*"நல்லோரைக் காக்கவும் தீயன செய்வோரை அழிக்கவும் அறத்தை நிலை நிறுத்தவும் நான் யுகந்தோறும் பிறக்கிறேன்"* என்பது கீதா வாக்கியம்.

இவ்வாறு ஸ்ரீமன் நாராயணன் பல அவதாரங்கள் எடுத்து இப்பூமியில் அறத்தை நிலை நிறுத்தியிருக்கிறார். திருமாலின் இந்த அவதாரப் பெருமைகளைப் பற்றி வியாச பகவான் எழுதிய ஸ்ரீ பாகவதம் என்னும் புனித நூல் விரிவாக எடுத்துக் கூறுகிறது. திருமாலின் இந்த அவதாரங்களில் தசாவதாரங்கள் முக்கியமானவை. திருமாலின் இந்த அவதாரப் பெருமைகளைப் பற்றி ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் மிகுந்த பக்திச் சுவையுடன் எடுத்துக் கூறுகிறார்கள். திவ்யமான அந்தப் பாசுரங்களை நாலாயிர திவ்யப் பிரபந்த நூலில் காணலாம்.

பாகவத நூல் எடுத்துக் கூறியுள்ளபடி பரசுராமரின் வரலாற்றைப் பற்றி இந்த நூலில் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. சர்வவல்லமை பெற்றிருந்த கார்த்த வீரியார்ஜுனன் என்னும் மன்னன் தனது அசுர பலத்தின் காரணமாக மிகுந்த கர்வம் கொண்டிருந்தான். அதனால் பல அட்டகாசங்களும் கொடும் செயல்களும் செய்து கொண்டிருந்தான். தனக்கு நிகர் யாருமில்லை என்று மகா ஆணவம் கொண்டிருந்தான். யாராலும் அவனைத் தட்டிக் கேட்க முடியவில்லை. அவன் தன்னுடைய படை பலத்தின் மூலம் ஜமதக்கினி முனிவரின் ஆஸ்ரமத்தில் இருந்த தெய்வீகப் பசுவை அபகரித்துக் கொண்டு சென்றுவிட்டான். அதனால் கோபம் கொண்ட பரசுராமன், தனது தெய்வீக ஆயுத பலத்தால், கார்த்த வீரியார்ஜுனனுடைய நாட்டிற்குப் படையெடுத்துச் சென்று, அவனையும், அவனுடைய படைகளையும், கொன்று அவன் அபகரித்துச் சென்றிருந்த தனது ஆஸ்ரமத்தின் தெய்வீகப் பசுவையும் மீட்டிக் கொண்டு வந்து விட்டான்.

அதன் பின்னர் சில ஆண்டுகள் கழித்து கார்த்த வீரியார்ஜுனனுடைய பிள்ளைகள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்து, தங்கள் தந்தை கொல்லப்பட்டதற்குப் பழி வாங்கும் நோக்கத்துடன் ஜமதக்கினி ஆஸ்ரமத்திற்கு படைகளுடன் வந்து ஜமதக்கினி முனிவரின் கழுத்தை வெட்டித் தலையைக் கொண்டு போய்விட்டார்கள்.

இதைக் கேள்விப்பட்ட பரசுராமன் மீண்டும், கார்த்த வீரியார்ஜுனனின் பிள்ளைகளின் நாட்டின் மீது படையெடுத்து அவர்களைவென்று தனது தந்தையின் தலையை மீட்டிக் கொண்டு வந்து ஆஸ்ரமத்தில் இருந்த உடலுடன் சேர்த்து தகனம் செய்து ஈமக்கடன்களை முடித்தான்.

இவ்வாறு க்ஷத்திரிய அரசர்கள் அறம் தவறி நடக்கின்றார்கள் என்று கருதி பரசுராமர், இருபத்தியொரு தலைமுறைகளைச் சேர்நத பல க்ஷத்திரிய அரசர்களையும் கொன்று பழி தீர்த்துக் கொண்டதாக பரசுராமரின் வரலாறு குறிப்பிடுவது பற்றியும் இந்த நூலில் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

பரசுராமனுடைய படையெடுப்புகளால் பல க்ஷத்திரியர்கள் கொல்லப்பட்டும் அதனால் நாட்டில் ஒரு க்ஷத்திரிய நாசம் ஏற்பட்டது.

பரசுராம அவதாரத்தையடுத்து இராமாவதாரம் நிகழ்கிறது. இராமன் க்ஷத்திரிய குலத்தில் பிறக்கிறார். இராமாயணப் பெருங்கதையில் பரசுராமன்–ஸ்ரீராமன் சந்திப்பு நிகழ்கிறது. இது ஒரு அரிய அற்புதமான காட்சியாகும். இந்த நிகழ்ச்சியில் பரசுராமன் கையில் இருந்த வல்லமைமிக்க விஷ்ணு (நாராயண தனுசு) தனுசு இராமன்கைக்கு மாறுகிறது. அத்துடன் பரசுராமனுடைய தவ வலிமை முழுவதும், ஸ்ரீராமபிரானிடம் வந்து சேருகிறது.

பரசுராமன்–ஸ்ரீராமன் சந்திப்பின் மூலம் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களும் இடையிலிருந்த பகை அதாவது அறிவாளிகளுக்கும், அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் இடையிலான பகை நீங்குகிறது. இரு பிரிவினர்களுக்குமிடையிலான ஒற்றுமை ஏற்படுகிறது. இந்த ஒற்றுமை நாட்டில் நல்லாட்சிக்குக் காரணமாகிறது.

பரசுராமன்–கல்யாணராமன் சந்திப்பு ஒருயுக சந்திப்பாகும். அதன் மூலம் பாரதத்தின் ஒற்றுமைக்கு அடித்தளம் அமைக்கப்படுகிறது. க்ஷத்திரியர்கள் அரசர்களாகவும் பிராமணர்கள் அமைச்சர்களாகவும் சேர்ந்து செயல்பட்டு நல்லாட்சி அமையக் காரணமாகிறார்கள். இனி உலகிற்குத் துன்பம் இல்லை.

எண்ணிய பொருள் எல்லாம் இனிது முற்றுக என்று கூறி தனது அவதாரக் கடமைகளை முடித்துக் கொண்டு பரசுராமர் தவம் செய்ய மீண்டும் மலையடிவாரத்திற்குச் சென்றுவிட்டார்.

இந்த யுக சந்திப்பின் சிறப்பு அதன் வரலாற்று முக்கியத்வம் பற்றி இந்த நூலில் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பரசுராமனும்–கல்யாணராமனும் என்னும் தலைப்பில் அருப்புக்கோட்டை கம்பன் கழகத்தில் அடியேன் ஆற்றிய சொற்பொழிவுக்காகத் தயாரிக்கப்பட்ட குறிப்புகளைத் திரும்பவும் பார்த்தபோது இக்கருத்துக்களைக் கொண்ட ஒரு சிறு நூலையே எழுதிவிடலாம் என்று கருதி எழுதி முடித்தேன்.

இதன் அச்சுப்பின் நகலை, அருப்புக் கோட்டை கம்பன் கழகத் தலைவரும் ஆன்மீகச் செல்வரும் சிறந்த தேச பக்தரும் தொழிலதிபருமான உயர்திரு. டி.ஆர். தினகரன் அவர்களை நேரில் சென்னையில் சந்தித்து அவரிடம் காண்பித்து இதை நூலாக வெளியிடுவதற்கு நான் செய்து வரும் ஏற்பாடுகளைக் குறிப்பிட்ட போது, அன்னார் என்னை பாராட்டி தனது ஆதரவையும் தெரிவித்தார். அவருக்கு எனது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை சிறந்த முறையில் அச்சு வடிவமைத்தும் அச்சடிக்கவும் ஏற்பாடு செய்த எனது நண்பர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

இதை அன்பர்கள் வாங்கிப் படித்து பயன்பெற வேண்டுகிறேன்.

அ. சீனிவாசன்
நூலாசிரியர்

# கல்யாணராமனும் பரசுராமனும்

## 1. தோற்றுவாய்

பரசுராமனும் ஸ்ரீ ராமனும் திருமாலின் அவதாரங்கள். இவ்விரு பெருமாள்களின் அவதாரப் பெருமைகளைப் பற்றியும் அவர்களுடைய அரிய செயல்களைப் பற்றியும் சாதனைகளைப் பற்றியும் நமது இதிகாசங்களும் புராணங்களும் மிகவும் சிறப்பாகக் குறிப்பிடுகின்றன. பாகவத புராணம் இரு அவதாரங்களைப் பற்றிய வரலாறுகளையும் விவரித்துக் கூறுகிறது.

ஆழ்வார்கள், பரசுராம அவதாரத்தின் பெருமைகளையும், இராமாவதாரத்தின் சிறப்புகளைப் பற்றியும் தங்களுடைய பல பாசுரங்களிலும் பெருமைப் படுத்திப் பாடியிருக்கிறார்கள்.

பரசுராமனைப் பற்றிய குறிப்புகள் இராமயணத்திலும் மகாபாரதத்திலும் வருகின்றன. பாகவத புராணத்தில் பரசுராமரின் வரலாறு விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

திருமாலின் அவதாரங்களில் பத்து அவதாரங்கள் (தசாவதாரம்) மிகவும் சிறப்பானவைகளாக குறிப்பிடப்படுகின்றன.

பரசுராமரின் அவதாரச் செயல்கள் வீரமும் தீரமும், வேகமும் ஆவேசமும், வரலாற்றுச் சிறப்புகளும் சமுதாய சிறப்புகளும் அரும் செயல்களும் நிரம்பியவை. யார் குற்றம் செய்தாலும் அதைத் தண்டிக்கும் நேர்வழி கொண்டவை. இராமாவதாரம் திருமாலின் பூரணாவதாரம் என்றும் கிருஷ்ணாவதாரம் பரிபூரணாவதாரம் என்றும் சிறப்பு கொண்டவையாகும்.

ஸ்ரீராமனுடைய வரலாறு பற்றியும் ஆட்சி பற்றியும் பாரத நாட்டு மக்களிடையே இராமராஜ்யம் என்னும் சிறப்புப் பெயரில் நல்லாட்சியாக விரிவாகப் பரவியிருந்தது. இராமபிரானுடைய அந்தச் சிறப்புமிக்க

கதையை ஒரு புகழ்மிக்க இதிகாசமாக இராமாயணம் என்னும் பெயரில் பல மகான்களும் மகா ஞானிகளும் பாடியிருக்கிறார்கள். நாட்டுப்புறக் கதைகளாக, நாடகங்களாக, கூத்துக்களாக மக்களிடையில் பலராலும் பாடப்பட்டும் பரவியிருக்கிறது.

கம்பன் தனது நூலின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது,

"தேவபாடையில் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும் முந்திய
நாவினால் உரையின் படி நான் தமிழ்ப்
பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ!"

(இதில் மூவர் என்பது வால்மீகி, வசிட்டர், வியாசர் ஆகிய மூவராகும். இதில் வியாசரை நீக்கி போதாயனரைச் சேர்த்து மூவர் என்று கூறுவோரும் உளர்),

வடமொழியில் இராமயணக்கதையைப் பெருங்காவியமாகப் பாடியதில் வான்மீகி, வசிட்டர், வியாசர், போதாயனர் ஆகிய மாமுனிவர்கள் முக்கியமானவர்கள். இவை தவிர ஜைனராமாயணமும் மிகவும் பிரபலமானதாகும். இவைகளில் நாரதர் கூற அதைக் கேட்டு வட மொழியில் (சமஸ்கிருத மொழியில்) வால்மீகி முனிவர் பாடியுள்ள இராமாயணப் பெருங்காவியம் சிறப்பு மிக்கதாகும். மக்களிடையில் மிகவும் பிரபலமாகப் பரவியுள்ளதாகும். கம்பீரமான சமஸ்கிருத ஸ்லோகங்களைக் கொண்டதாகும்.

கம்பராமாயணத்தின் தோற்றத்தைப் பற்றி தனிப்பாடல் ஒன்று இவ்வாறு குறிப்பிடுகிறது.

"நாரணன் விளையாட்டெல்லாம்
நாரத முனிவன் கூற
ஆரணக்கவிதை செய்தான்
அறிந்த வான்மீகி என்பான்

சீர் அணிசோழ நாட்டுத்
திருவழுந்தூரில் வாழ்வோன்
கார் அணி கொடையான், கம்பன்,
தமிழினால் கவிசெய்தானே".

வால்மீகி இராமாயணம், பாரத மக்களின் உள்ளங்களில், பயபக்தியோடு பண்டைய பாரதப் பெருமையோடு நன்கு பதிந்து நிலை பெற்றிருக்கிறது.

வால்மீகி இராமாயணத்தின் மூலத்திலிருந்துதான், இந்திய மொழிகள் அனைத்திலும், இராமயண காவியம் எழுதப்பட்டு வெளி வந்திருக்கிறது. அந்த வகையில் இராமாயண மகா காவியம் பாரத நாடு முழுவதிலும் நமது நாட்டு மக்களின் பொதுக் காவியமாக, பொது இதிகாசமாக நிலை பெற்றிருக்கிறது.

தமிழில் வெளிவந்துள்ள இராம காதைகளில், கம்ப நாடர் எழுதியுள்ள இராமாவதாரம் என்னும் மகா காவியம், கம்பராமாயணம் என்னும் பெயரில் சிறப்புப் பெற்று நிலை பெற்றிருக்கிறது.

கம்ப ராமாயணம் தமிழில் ஒரு பேரிலக்கியமாக, மிகவும் பிரபலமான பெருங்காவியமாகச் சிறப்புப் பெற்றிருக்கிறது. இந்திய மொழிகளில் உள்ள இராமாயண காவியங்களில் வால்மீகி இராமாயணத்திற்கு அடுத்தப்படியாக, சகல அம்சங்களிலும் சிறப்பு மிக்கதாகக் கம்பராமாயணம் கருதப்படுகிறது. கம்ப ராமாயணம் தமிழ் மொழியை உயர்த்தியிருக்கிறது. தமிழ் மொழியை செழுமைப்படுத்தியிருக்கிறது. வளப்படுத்தியிருக்கிறது. தமிழ் மொழியைப் பெருமைப் படுத்தியிருக்கிறது. தமிழ் மொழியைப் பெருமைப்படுத்தி உலக மொழிகளில் ஒன்றாக உயர்வதற்கு உதவியிருக்கிறது. உலக இலக்கியங்களில் முதல் வரிசையில் கம்ப ராமாயணம் நிற்கிறது.

கம்பனை அவனுக்குப் பின் வந்த அனைத்துப் புலவர்களும் தமிழறிஞர்களும் தமிழ் படித்த அனைவரும் பாராட்டியிருக்கிறார்கள்.

கம்பனைப் பற்றிப் பெருமைப் பட்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள் கம்பனை ஒரு மாபெரும் கவிஞனாக, ஈடுஇணையற்ற மகா கவிஞனாக, பெரும் புலவனாக கவிச்சக்கவர்த்தியாகப் பாராட்டுகிறார்கள். கம்பராமாயணத்தைத் தமிழ் மொழியில் உள்ள பேரிலக்கியமாக, பெருங்காவியமாகப் போற்றி வருகிறார்கள்.

கம்பன் தமிழ் மக்களும் இந்திய மக்களும் பெருமைப் படக் கூடிய மகா கவிஞன். கம்ப ராமாயணம் தமிழ் கூறும் நல்லுலகமும் இந்திய மக்கள் அனைவரும் பெருமைப்படக் கூடிய மகாகாவியமாகும். ஆயினும் தமிழ் நாட்டில் சிலர் தங்களுக்கிருந்த அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி, அன்னிய சக்திகளின் ஆதரவையும் பின் பலமாகவும் பின்புலமாகவும் வைத்து இனவாதம் பேசி, கம்பனையும், கம்ப ராமாயணப் பெருங்காவியத்தையும் இழிவு படுத்தவும், கொச்சைப்படுத்தவும், அந்த மாபெரும் காவியத்தையும் அதன் பாத்திரப் படைப்புகளையும் அவதூறு செய்யவும் முற்பட்டார்கள்.

கம்ப ராமாயணப் பாடல்களை கவிதைகளை கல்வி நிலையங்களின் பாடத் திட்டங்களில் கூடக் குறைத்து ஓரம் கட்டுவதற்கும் முயற்சித்தார்கள். இராமனை ஆரியன் என்றும், இராவணனைத் தமிழன் என்றும் பேசி, இராமாயணம் தமிழனுக்கு எதிரான கதையென்றும் பேசி, அத்தகைய தவறான, உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை தமிழ் மக்களிடையில் பரப்பினார்கள். நல்ல வேளையாகத் தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலோர் அத்தகைய தவறான, உண்மைக்கும் அறிவுக்கும் புறம்பான கருத்துக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிரான, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் விரோதமான அத்தகைய கருத்துக்களைத் தமிழகம் நிராகரித்து வருகிறது.

அத்தகைய இனவாதத் தீய நச்சுக் கருத்துக்களின் மாசுக்காற்று தமிழகத்தில் வேகமாக வீசிய போது, தமிழ் மக்கள் செய்த புண்ணிய பலன், தமிழகத்தின் தவப்புதல்வர் மூதறிஞர்

இராஜாஜி அவர்கள் சக்கரவர்த்தித் திருமகன் (இராமாயணம்) வியாசர் விருந்து (மகாபாரதம்) ஆகிய தமிழ் உரைநடை நூல்களை (முதலில் கட்டுரைகளாக) எழுதினார். அந்த நூல்கள் வெளியிடப்பட்டு பல்லாயிரக் கணக்கான பிரதிகள் தமிழ் கூறும் நல்லுலகத்தில் வேகமாக விற்பனையாகிப் பரவியது.

மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தனது இராமாயண உரைநடை நூலில் ராமாயணம், பாரதம் முதலிய புராணங்களைப் படிக்கும் இக்காலத்தவர்களுக்குப் பொதுவாகச் சில வார்த்தைகள் என்று தொடங்கி

புராணங்களில் தேவர்களும் ராக்ஷசர்களும் அடிக்கடி வருவார்கள். ராக்ஷசர்கள் என்பவர்கள் அதருமத்துக்குக் கொஞ்சமும் பயப்படாத துஷ்டர்கள் குலம். சர்வ சாதாரணமாகத் தீய காரியங்களைச் செய்வார்கள்.

"இரக்க மென்று ஒரு பொருள் இல்லாத நெஞ்சினர்
அரக்கர் என்று உளர் பலர் அறத்தின் நீங்கினார்".

என்று கம்பர் விளக்கியிருக்கும் கூட்டம் அசுரர்களையும் ராக்ஷசர்களையும் போன்றவர்களே!

ராக்ஷசர்களிலும் கூட ஒரு சில அறிவாளிகளும் நல்லவர்களும் இருந்தார்கள். எந்த நல்ல குலத்திலும் சில தீயவர்கள் உண்டாவார்கள். அப்படியே எந்தக் கெட்ட குலத்திலும் சில சமயம் நல்லவர்களும் இருப்பதுண்டு. ஆனால் மொத்தத்தில் ராக்ஷசர்களும் அசுரர்களும் கம்பர் சொல்லியிருக்கிறபடி தீய கருமங்களிலேயே ஈடு பட்டுச் சந்தோஷப்பட்ட கூட்டம். அவர்களைத் தமிழர்கள் என்றும், நம் முன்னோர்கள் என்றும் சிலர் இக்காலத்தில் அறிவீனமாக எண்ணியும் பேசியும் வருவது பரிதாபம்.

எந்தப் பழைய தமிழ் நூலிலாவது சரித்திரத்திலாவது தனிப் பாட்டிலாவது கிராமப்பாட்டிலாவது இப்படிச் சொன்னதில்லை. தமிழர்களுக்கு நீங்கள்தான் புராணத்தில் அரக்கர் என்று சொல்லப்

பட்டவர்கள் என்கிற புதுப்பட்டம் அளிப்பதற்குப் பழைய தமிழ் நூல்களில் ஆதாரம் எங்கும் இல்லை என்றும் மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

எனவே தவறான உண்மைக்குப் புறம்பான அறிவுக்குப் பொருந்தாத நச்சுக் கருத்துக்கள் சமுதாய நீரோட்டத்தில் புது வெள்ளத்தின் நுறைகளைப் போல் ஒதுங்கி மறைந்து வருகின்றன.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் கம்பனும் வள்ளுவனும் இளங்கோவடிகளும், ஔவையும், ஆண்டாளும், மங்கையர்க்கரசியும், திரகவதியம்மையாரும் பிறந்து வளர்ந்து நல்லறம் நடத்திய இந்தப் புண்ணிய பூமியில் திருமூலரும் தாயுமானவரும் வள்ளலாரும் மகாகவி பாரதியாரும் பிறந்து நடமாடிய இந்த தமிழ் திருநாட்டில் இராஜாஜி போன்ற அறிஞர்களும் பேரறிஞர்களும் அரசியல் நெறிகள் வளர்த்த இந்த தங்கத் தமிழகத்தில் அத்தகைய இனவாதப் புன்மை இருட்கணம் நீங்கி தேச பக்தியும் தெய்வ பக்தியும் நிறைந்த புதிய சிந்தனைகள் தோன்றி ஒளி வீசக் தொடங்கியிருப்பதைக் காண்கிறோம்.

மகாகவி பாரதி கூறினான் தமிழா தெய்வத்தை நம்பு பயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகிறது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வம் கண்ட கவிகள், அற்புதமான சங்கீத வித்வான்கள், கை தேர்ந்த சிற்பிகள், பல நூல்வல்லோர், பல தொழில்வல்லோர், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியில் தேவர்கள் மனிதராக அவதரித்திருக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்து விட்டு நான்கு பக்கங்களிலும் பார்!

நமது நாட்டு ஸ்திரிகளிலே பலர் சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீரியம், கவிதை, அழகு, மகிழ்ச்சி நலங்கள் எல்லாம் உன்னைச் சார்ந்திருக்கின்றன. "*தமிழா பயப்படாதே*" என்று கூறுகிறார்.

இவ்வாறு தமிழகத்தில் அறிஞர்கள் அறிவில் சிறந்த பெரியோர்கள், தெய்வம் கண்ட கவிகள், சங்கீத வித்வான்கள், நாட்டிய கலைஞர்கள், சிற்பிகள், நூல்வல்லோர், தொழில்வல்லோர், தர்மிஷ்டர்கள் தலை சிறந்த தேச பக்தர்கள், தெய்வ பக்தி நிரம்பியவர்கள், அச்சமில்லாத தீரர்கள் பிறந்து தேச பக்தியையும் தெய்வ பக்தியையும் தமிழ் பற்றையும் ஆரோக்கியமான கலை இலக்கிய மரபுகளையும் வளர்த்திருக்கிறார்கள், வளர்த்தும் வருகிறார்கள்.

மறுபக்கம் எதிர்மறைக் கருத்துக்களும், நாட்டு மண்ணில் விஷக் கிருமிகளும் பரவியிருக்கிறது. தமிழகத்து இலக்கிய நீர் நிலைகளைக் கழிவு படுத்தியிருக்கிறது. ஆகாயத்தையும் கலைக் காற்றையும் மாசுப்படுத்தியிருக்கிறது. பெரும் அளவில் அத்தகைய எதிர்மறைக் கருத்துக்களைத் தமிழகம் நிராகரித்து வந்த போதிலும் இன்றும் அதன் பிசிர்கள் தமிழ்ச் சிந்தனையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. அதன் கழிம்புகள் போகவில்லை. அவைகளின் குப்பை கூழங்கள் அவ்வப்போது குவிந்துவிடுகின்றன.

அண்மையில் தமிழகத்தின் முதுமையான ஒரு இனவாதத் தலைவர் ஒருவர் தான் விரும்பாத தன்னை முழுமையாக ஆதரிக்காத தனது கருத்துக்களுக்கு மாறுபட்ட, தன்னைத் தனித் தலைவன் எனத் துதிபாடாத தனது படத்தையும் அறிக்கைகளையும் முதல் பக்கத்தில் முத்திரையிட்டுப் போடாத தான் விரும்பாதவர்களைக் கண்டிக்காத தனக்குப் பின்னால் மட்டுமே அணிவகுத்து வராத தன்னையும் தனது குடும்பத்தை மட்டுமே ஆதரிக்காத சில தமிழ்ப் பத்திரிகைகளை விபீஷணப் பத்திரிகைகள் என்று குறிப்பிட்டுக் கூறிப் பேசியிருக்கிறார். இங்கு விபீஷணனுடைய பெயரை அவர் குறிப்பிட்டிருப்பது அவருடைய இனவாதக் கண்ணோட்டத்தில் தான் என்பது தெளிவு, அவருடைய கருத்துப்படி.

இராவணன் தமிழன், அவன் தம்பி விபீஷணன் தன் அண்ணனைக் கை விட்டுவிட்டு ஆரிய இராமனுடன் போய்ச் சேர்ந்து

கொண்டான். அந்த விபீஷணன் ஒரு இனத்துரோகி. அது போல இந்த இனவாதத் தலைவனும் ஒரு தமிழன் இந்த தாழ்விலாத் தமிழனை ஆதரிப்பதை விட்டுவிட்டு சில தமிழ்ப் பத்திரிகைகள் அவருக்கு மாறான கருத்துக்களை வெளியிடுகின்றன. எனவே அந்த தமிழ்ப் பத்திரிகைகளெல்லாம் விபீஷணப் பத்திரிகைகள் என்பது அந்த தமிழ்த் தலைவரின் பேச்சு. அவருடைய பேச்சில் உள்ள இதர விவரங்கள் விஷயங்கள் இருக்கட்டும். அதிலுள்ள நியாய அநியாயங்கள் ஒருபுறம் இருக்கட்டும், விபீஷணனுடைய பெயரை இந்த நேரத்தில் இழுத்திருப்பது அவர் அணிந்துள்ள சித்தாந்தத் கண்ணாடி மூலம் கிடைக்கும் கரும் பார்வையாகும்.

அதுதான் கம்பனுக்கும் கம்பராமாயணப் பெருங் காவியத்திற்கும் எதிரான குறுகிய இனவாதத் குறும்பார்வையாகும்.

ஒன்றை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த மூத்தவரின் கருத்துக்கள், தமிழுக்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழ் இன மரபுக்கும் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ் பண்பாட்டு வளர்ச்சிக்கும் தமிழ் பாரம்பரியத்திற்கும் எதிரான விரோதமான எதிர்மறைக் கருத்துக்களாகும்.

தமிழுக்கு ஏற்பட்டுள்ள இந்த கருப்புக் களங்கத்தைப் போக்க வேண்டியதும் அதன் மிச்ச சொச்சங்களைத் துடைத்தெரிய வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

கம்பனுடைய மகா காவியத்தின் படி விபீஷணன் என்பது யார்? விபீஷணன் என்னும் பெயரைக் கூடக் கம்பன் தனது காவியத்தில் வீடணன் என்று தமிழ்ப்படுத்தியே குறிப்பிடுகிறார். வீடணன் உத்தமன், அறவழியில் நிற்பவன், தர்மவான், சத்தியன், நீதியான், ஐம்புலன்களை அடக்கி நேர்வழியில் செல்பவன், அறிவில் மிக்கவன், பக்திமான், வேந்தர் வேதியர் மேல் உளோர் கீழ் உளோர் முதலியோர் அனைவரும் விரும்பும்படி பிறந்துள்ள புண்ணியன், குற்றமில்லாத குணத்தினன், பகைமை நீங்கிய மனத்தினன், தனித்து

வாழும் தருமம் அன்னான், தகவிறு சிந்தையன், தரும நீதியன், கவிஞரின் அறிவு மிக்கவன்.

அனுமன் சீதையைத் தேடி இலங்கை நகரில் செல்லும் போது ஒவ்வொரு மாளிகையாகச் சென்று பார்க்கிறார். அதில் வீடணன் மாளிகைக்குச் சென்று அவன் தூங்கிக் கொண்டிருந்த காட்சியைப் பற்றி,

“ஏந்தல் இவ்வகை எவ்வழி மருங்கினும் எய்திக்
காந்தன் மெல் விரல் மடந்தையர் யாரையும் காண்பான்
வேந்தர், வேதியர் மேல் உளோர் கீழ் உளோர் விரும்பப்
போந்த புண்ணியன் கண் அகல் கோயிலுள் புகுந்தான்”

என்றும்

“பளிக்கு வேதிகைப் பவழத்தின் கூடத்துப் பசுந்தேன்
துளிக்கும் கற்பகப் பந்தரில் கரு நிறந்தோர் பால்
வெளித்து வைகுதல் அரிது என அவர் உருமேவி
ஒளித்து வாழ்கின்ற தருமம் அன்னான் தனை உற்றான்”

என்றும் கம்பர் கூறுகிறார்.

இன்னும் வீடணனைப் பற்றிக் கும்பகருணன் இராமனிடம் கூறும் போது நீதியால் வந்ததொரு நெடுந்தரும நெறியல்லாமல் சாதியால் வந்த சிறுநெறி அறியான் என் தம்பி என்று கூறுகிறான்.

போர்க்களத்தில் உயிர் போகும் தறுவாயில் கும்பகருணன் தன் தம்பி வீடணனைப் பற்றி இராமனிடம் கூறுகிறான்.

“நீதியால் வந்தது ஒரு நெடும் தரும
நெறியல்லால்
சாதியால் வந்த சிறு நெறி அறியான்
என் தம்பி

ஆதியாய்! உனை அடைந்தான், அரசர்
உருக் கொண்டு அமைந்த
வேதியா! இன்னம் உனக்கு அடைக்கலம்
யான் வேண்டினேன்"

என்றும்,

மேலும் இராவணன் வீடணனைக் கண்டுவிட்டால் அவனைத் தம்பி என்று பார்க்காமல் கொன்று விடுவான் எனவே அவனை எப்படி,யும் காப்பாற்றுவாய்.

"தம்பி யென நினைந்து இரங்கித்
தவிரான் அத்தகவு இல்லான்
நம்பி இவன் தனைக் காணின் கொல்லும்
இறை நல் கானால்
உம்பியைத்தான், உன்னைத்தான்
அனுமனைத்தான் ஒரு பொழுதும்
எம்பி பிரியான் ஆக அருளுதி! யான்
வேண்டினேன்"

என்று இராமபிரானிடம் கும்பகருணன் வரம் வேண்டுகிறான்.

பனிமலர்த்தவிசின் மேலோன் (நான்முகன்) பார்ப்பன குலத்திற் கெல்லாம் தனி முதல் தலைவன் ஆனாய் என்று இந்திரசித்தன் தனது சிற்றப்பனைக் குறித்துக் கூறுகிறான். அதாவது வீடணன் பிரம்ம குலத்தின் வழியில் வந்த பார்ப்பன குலத்தில் தோன்றியவன் என்பதை இங்கு குறிப்பிடுகிறான்.

"பனி மலர்த் தவிசின் மேலோன் பார்ப்பன
குலத்துக் கெல்லாம்
தனி முதல் தலைவன் ஆனாய், உன்னை
வந்து அமரர் தாழ்வார்

மனிதருக்கு அடிமையாய் நீ இராவணன்
செல்வம் ஆள்வாய்
இனி உனக்கு என்னோ மானம்?
எங்களோடு அடங்கிற்று அன்றே"

என்பது கம்பன் பாடல்

(குறிப்பு இங்கு இந்திர சித்தன் இராவணனுடைய குலத்தை பார்ப்பன குலம் எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது)

அதாவது இந்திரசித்தன் நிகும்பலை யாகம் செய்தபோது அந்த யாகத்தை அழிப்பதற்கு இலக்குவனும் வீடணனும் சில வானர வீரர்களும் சென்றனர். அங்கு இந்திர சித்தனுக்கும் இலக்குவனுக்கும் இடையில் கடும் போர் நிகழ்ந்தது. அதில் இந்திரசித்தன் தொடுத்த கணைகளை யெல்லாம் இலக்குவன் தடுத்தான். எனவே தனது தோல்விகளுக்கெல்லாம் வீடணன்தான் காரணம் என்று இந்திரசித்தன் கருதினான். வீடணனை இகழ்ந்து பேசுகிறான். அப்போது இந்திரசித்தன் வீடணனிடம் மனிதரைப் புகழ்ந்து அவர்களைத் தொழுது அவர்கள் பின் செல்கிறாய். நீர் இருக்கும் வரையில்தான் மீன் இருக்கும். அதைப் போல இராவணன் இருக்கும் வரையில்தான் அரக்கர் குலம் இருக்கும். நீ பார்ப்பன குலத்துக் கெல்லாம் தலைவனாகப் பிறந்தாய் மனிதருக்கு அடிமையாகி இராவணனுடைய செல்வத்தை ஆளப் போகிறாயா? உனக்கு மானம் இல்லையா? எதிரிகளின் அம்பினால் இராவணன் வீழ்ந்து விட்டால் நீ அவன் மீது விழுந்து அழுவாயா அல்லது எதிரிகளோடு சேர்ந்து கொண்டு அந்த இராமனை வாழ்த்தித் தொழுது ஆர்ப்பாட்டம் செய்வாயா? என் அம்புகளுக்கு இரையாகி போர்க்களத்தில் வீழ்ந்து பின்னர் மருந்தினால் உயிர் பெற்று வந்துள்ள மனிதர் இலங்கை வேந்தனைக் கொல்வார்களா? அதன் பின்னர் நீ இலங்கையை ஆளப் போகிறாயா? என்றெல்லாம் இகழ்ந்து பேசிப் பழி வந்தாலும் பரவாயில்லை. உன்னை வானுலகிற்கு அனுப்புகிறேன்

பார் என்று கூறி வீடணனை நோக்கித் தனது சரங்களைத் தொடுக்க முனைந்தான்.

அப்போது வீடணன் இந்திரசித்தனுடைய நிந்தனைகளுக்குப் பதில் கூறிப் பேசுகிறான். பாவம் கொடுமையானது. தருமமே மிகவும் சிறந்தது. அறத்திற்கே துணையாக நிற்பேன். மறத்திற்குத் துணையாக நின்று மாயாப் பழியோடு வாழ மாட்டேன். மெய்மை துறக்க மாட்டேன். பொய்யின் பக்கம் நிற்க மாட்டேன். இலங்கை வேந்தன் தவறுகளை இழைத்த போதே நான் அவனுக்குப் பின் பிறந்திலேன் நான் நறவம் (கள் – போதைப் பொருள்) உண்ண மாட்டேன். வஞ்சகம் புரிய மாட்டேன். என் பால் யாரும் எந்தக் குற்றமும் குறையும் காண முடியாது. உமக்கும் அது தெரியும், பெண்களை அபகரித்து வாழும் மன்னனைத் துறந்தது பிழையாகாது.

மூன்று உலகங்களும் போற்றும் முதல்வன், தேவர்களுக்கெல்லாம் தேவன், அவன் தேவி, கற்பினில் சிறந்தவள், அவளை வன்முறையால் கவர்ந்தது தீது. அவளை நோகடிப்பது நல்லதல்ல. அந்த மாற்றான் தேவியை விட்டு விடுங்கள் என்று நான் கூறிய போது உன் தந்தை என் மீது கடுங்கோபம் கொண்டு வெகுண்டு போ வெளியே' என்று என்னை விரட்டி விட்டான். அப்போது நான் உங்களை விட்டு வெளியேறினேன். அதனால் எனக்கு வேண்டுமானால் நரகம் கிட்டட்டும். அறத்தினைப் பாவம் வெல்லாது என்னும் உண்மை அறிந்து இராமனை அடைவது அறிவுக்குப் பொருத்தமானது என்று இங்கு வந்து சேர்ந்தேன். வருவது வரட்டும் என்று வீடணன் இந்திரசித்தனுக்கு பதிலளித்தான்.

இந்திரசித்தனுடைய நிந்தனைகளுக்கு வீடணன் கூறிய மேற்குறிப்பிட்ட பதில் குறித்த கம்பனுடைய தனிச் சிறப்பான கவிதை வரிகள்.

"அறம் துணையாவது அல்லால்
அருநரகு அமைய நல்கும்

மறம் துணையாக மாயாப் பழியொடும்
வாழமாட்டேன்
துறந்திலேன் மெய்ம்மை,
பொய்ம்மை உம்மையே துறப்பது அல்லால்
பிறந்திலேன் இலங்கை வேந்தன்பின்
அவன் பிழைத்த போதே"

" உண்டிலேன் நறவம், பொய்ம்மை உரைத்
திலேன், வலியால் ஒன்றும்
கொண்டிலேன், மாய வஞ்சம்
குறித்திலென் யாரும் குற்றம்
கண்டிலர் என்பால், உண்டே?
நீயிரும் காண்டிர் அன்றே
பெண்டிரின் திறம்பினாரைத்
துறந்தது பிழையிற்று ஆமோ?"

"மூவகை உலகம் ஏத்தும் முதல்வன்
எவர்க்கும் மூத்த
தேவர்தம் தேவன் தேவி
கற்பினில் சிறந்துளாளை
நோவன செய்தல் தீது என்று
உரைப்பநுன் தாதை சீறிப்
போ என உரைக்கப்போந்தேன்
நரகதில் பொருந்துவேனோ?"

"வெம்மையில் தருமம் நோக்கா
வேட்டதே வேட்டு வீயும்

உம்மையே புகழும் பூண்க!
துறக்கமும் உமக்கே ஆக!
செம்மையில் பொருந்தி மேலோர்
ஒழுக்கினோடு அறத்தைத்தேறும்
எம்மையே பணியும் பூண்க!
நரகமும் எமக்கே ஆக."

"அறத்தினைப் பாவம் வெல்லாது
என்னும் அது அறிந்து ஞானத்
திறத்தினும் உறும் என்று எண்ணித்
தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன்
புறத்தினில் புகழே ஆக! பழியொடும்
புணர்க! போகச்
சிறப்பினிப் பெறுக! தீர்க!
என்றனர் சீற்றம் இல்லான்"

இவ்வாறு வீடணன் தன்னிலைவிளக்கம் கூறுகிறான். இந்திரசித்தன் சிறுபிள்ளை. அவனுடைய பேச்சும் சிறுபிள்ளைத்தனமானது. ஆயினும் உலகம் உண்மையை அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக வீடணன் இந்த விளக்கத்தைக் கூறுகிறான். இதில் இனவாதத்திற்கு இடம் எங்கே இருக்கிறது. இருப்பினும் சிலர் அறியாத்தனமாகக் கூறும் சிறுபிள்ளை வாதத்திற்கும் உலகம் உண்மையை அறிய வேண்டும் என்பதற்காக சிறு விளக்கம் தேவைப்படுகிறது.

இத்தனை உத்தமமான செய்திகளைக் கொண்ட கம்பனுடைய மகா காவியத்தின் சிறந்த கருத்துக்களெல்லாம் மக்களிடத்தில் தெளிவாகச் செல்ல வேண்டும். அந்த மாபெரும் காவியத்தின் நல்ல பலன்களையெல்லாம் தமிழ் மக்கள் பருக வேண்டும் என்று கருதி

பல அறிஞர்களும் பெரியோர்களும், அமைப்புகளும் இப்போது கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்க முனைந்துள்ளார்கள். அவர்களுடைய அரும்பணி மேலும் மேலும் வளர்ந்து வருகிறது.

செட்டி நாட்டுப் பெருநகரம் காரைக்குடியில் பல ஆண்டுகளாக சா.கணேசனார், ராய.சொக்கலிங்கனார் முதலானோர் மற்றும் பல சான்றோர்கள் வழியில் இந்து மதாபிமான சங்கமும் கம்பன் கழகமும் அமைத்து ஆண்டு தோறும் அறிஞர் பலரையும் அழைத்து சொற்பொழிவுகளும் இதர பல கம்பன் காவியம் தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்தியும் கம்பன் விழா மிகவும் சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

அதே போல தமிழகத்தில் சென்னை, புதுச்சேரி, கோயமுத்தூர், அருப்புக் கோட்டை, இராமநாதபுரம் திருப்பத்தூர் மற்றும் பல ஊர்களிலும் பல அறிஞர்கள் சேர்ந்து கம்பன் கழகங்கள் அமைத்து பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் விழாக்கள் நடத்தியும் தமிழ்த் தொண்டு ஆற்றி வருகிறார்கள். மற்றும் மும்பாய், டில்லி, கொல்கத்தா, ஆமதாபாத் முதலிய பல நகரங்களிலும் வாழும் தமிழ் மக்கள் தமிழ் சங்கங்கள் அமைத்து கம்பன் விழா நடத்தி கம்பன் காவியச் சிறப்புகளைப் பரப்பி வருகிறார்கள்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் ஜெயவிலாஸ் குழுமத்தின் தலைவரும், ஸ்ரீராமலிங்கா மில்ஸ் அதிபரும் சிறந்த கல்வியாளரும் தேசபக்தரும் தெய்வபக்தருமான ஆன்மீகச் செல்வர் டி.ஆர்.தினகரனார் அவர்களின் தலைமையில் கம்பன் கழகம் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

அந்த அமைப்பின் சார்பில் அருப்புக்கோட்டை நகரில் ஒவ்வொரு மாதமும் அமாவாசை நாளன்று கம்பராமாயணம் குறித்து பஜனையும் பல அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவுகளும் நடத்தி வருகிறார்கள்.

அந்த சேவையின் தொடர்ச்சியாக சென்ற வைகாசி மாதச் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சி (30,05,2003) வெள்ளிக் கிழமை

இரவு 7 மணியளவில் அருப்புக் கோட்டை சொக்கலிங்கபுரம் மீனாட்சி சொக்கநாதர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஜெயவிலாஸ் சுப்பராஜ் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியில் "*கல்யாண ராமனும் பரசுராமனும்*" என்னும் தலைப்பில் இந்நூலாசிரியர், மகாராஜபுரம் பாரதி சீனிவாசன் அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள். அந்த சொற்பொழிவின் சுருக்கமாக இந்தச் சிறிய நூல் எழுதப்பட்டிருக்கிறது. நூலாசிரியரின் குறிப்புகளுடன், தோற்றுவாய் உரையுடன் இந்த நூல் வெளியிடப்படுகிறது.

இன்று தமிழகத்திலும் தமிழ் கூறும் நல்லுலகத்திலும் கம்பனுடைய மகா காவியம் பல இடங்களிலும் சிறப்பாக பேசப்படுகிறது. தொடர்ச்சியாக பல இடங்களிலும் கம்பன் காவியம் தொடர்பான பல நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இடையில் ஏற்பட்ட சில இடையூறுகளையும் கடந்து இன்று கம்பனைப் பற்றிய பல ஆய்வுகளும், ஆராய்ச்சிகளும் செய்யப்படுகின்றன. பல சொற்பொழிவுகள், பாராயணங்கள் பட்டி மன்றங்கள், கவியரங்குகள் முதலியன நடந்து வருகின்றன. மக்கள் மனதில் கம்பன் காவியத்தின் கருத்துக்கள் பதிந்து தொடர்ந்து பரவி வருகின்றன. அதில் ஒரு இம்மித்துளியாக இந்த நூலும் வெளியாகிறது.

கம்பன் வாழ்க, கம்பன் புகழ்பாடும் நல்லோர் அனைவரும் ஸ்ரீ ராமபிரானின் அருள் பெற்று பல்லாண்டு, பல்லாண்டு வாழ்க.

## 2. கம்பனுடைய கடவுள் வாழ்த்துப் பாடல்

கம்பனுடைய கடவுள் வாழ்த்துப் பாடல் கம்பராமாயணத்தின் தொடக்கப் பாடலாகும். அது மிகப் பிரபலமான பாடலாகும். அது,

“உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும், நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார், அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண், நாங்களே”.

என்பதாகும்.

இது ஒரு அற்புதமான பாடல், இதில் கம்பனுடைய உலகக் கண்ணோட்டம், தத்துவ ஞானம் சமூகவியல் தத்துவம், கடவுட் கொள்கை, சரணாகதி (பிரபத்தி) தத்துவம், உலகின் இயக்கவியல் செயல்பாடு முதலியவை அனைத்தும் அடங்கியிருக்கின்றன.

இந்தப் பிரபஞ்சத்தில் அதாவது இந்தப் பேருலகத்தில் உள்ள சகல விதமான பொருள்களும் ஜீவராசிகளும், உயிர் பொருள்களும், ஜடப் பொருள்களும் தோன்றி நிலை பெற்று மாறி மறைந்து இடைவிடாத இயக்கத்தில் இருந்து கொண்டிருக்கின்றன.

எந்த உயிர்ப் பொருளும், ஜடப் பொருளும் தானாகத் தோன்றுவதில்லை. வெற்றிடத்திலிருந்து வருவதில்லை. அவை பஞ்ச பூதங்களின் (பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் – நிலம் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) பல வகையான சேர்மானங்களின் காரணமாக இந்தப் பொருள்கள் தோன்றுகின்றன. பொருள்களின் இந்தத் தோற்றங்களுக்கும் வளர்ச்சிக்கும் காரண காரியங்களாக (காரணமும் விளைவுகளுமாக) பஞ்சபூத சக்திகளுடன் சூரிய சந்திரர்களும் இதர கிரகங்களும் சுடர்களும் சேருகின்றன என்பதை இந்திய தத்துவ ஞானிகளும் அறிஞர்களும் அறிவியல் ஞானிகளும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இவ்வாறான பொருள்களின் தோற்றங்கள் அசைவுகள், அவைகளுடைய அத்தகைய தோற்றங்கள் அசைவுகளோடு நின்று விடுவதில்லை. அவைகள் அதற்குரிய காலத்திற்கு நிலைபெற்று (இருப்பு கொண்டு) பின்னர் தன் நிலையிலிருந்து அதாவது தனது பழைய நிலையிருந்து நீங்கி அதன் புதிய நிலைக்குச் சென்று விடுகின்றன. பொருள்களின் அதாவது உலகம் அனைத்தின் இத்தகைய தோற்றமும் (ஆக்கல் – படைத்தல்) நிலைபெறுதலும் நீக்கலும் இடைவிடாமல் நிகழ்ந்த கொண்டிருக்கின்றன. இதை படைத்தல், காத்தல் அழித்தல் என்றும் சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. இதில் அழித்தல் என்னும் சொல்லுக்குப் பதிலாக கம்பன் நீக்கல் என்னும் சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அது சிறப்பாகும்.

ஏன் என்றால் உலகில் எந்த பொருளும் அழிவதில்லை. அதன் பழைய நிலை நீங்கி புதிய நிலை ஏற்படுகிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர, பழையன அழிதலும், புதியன வருதலும் என்று கூறப்படவில்லை. எனவே கம்பனுடைய கருத்தும் சொல்லும் மிகவும் துல்லியமானதாகவும் மிகச் சரியானதாகவும் அமைந்திருக்கிறது.

அந்த முத்தொழில்களையும் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தெய்வாம்சங்களும் இடைவிடாது நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த முத்தொழிலுக்கும் தலைமையாக ஸ்ரீமன் நாராயணமூர்த்தி – திருமால் விளங்குகிறார். அவர் அனைவருக்கும் அனைத்திற்கும் தலைவர். அத்தலைவரிடம் நாங்கள் சரணடைகிறோம். அத்தலைவரை வணங்குகிறோம் என்று கம்பன் குறிப்பிடுகிறார். இங்கு சரணடைவது என்பது முற்றிலுமாக, மனம் வாக்கு காயத்துடன் முழுமையாக நாம் அந்த மூல சக்தியுடன் இரண்டற ஒன்றாகக் கலந்து விடுகிறோம் என்பதாகும். அந்தத் தலைவன் எல்லாப் பொருள்களிலும் தான் படைத்த அனைத்துப் பொருள்களிலும் இருக்கிறார். சர்வம் விஷ்ணுமயம் ஜகத். எனவே பிறப்புகளில் தோற்றங்களில் பேதமில்லை. அந்த பேதமற்ற

தலைவனிடம் எவ்வித பேதமும் இன்றி இரண்டறக் கலந்து விடுகிறோம். அதுவே சரணகதி, பிரபத்தித் தத்துவமாகும். இத்தகைய உயர்ந்த நிலையே வழிபாட்டின் அடிப்படையான தத்துவமாகும். வெறும் வேடத்திலும் சடங்குகளிலும் இல்லை. பிரபத்தி தத்துவம் என்பது பாரத சிந்தனை உருவாக்கிய மிக உயர்ந்த தனித் தன்மையான தத்துவமாகும்.

## 3. கம்பராமாயணத்தின் பன்முகச் சிறப்புகள்

இவ்வாறு உலகம் யாவையும் என்று தனது மாபெரும் காவியத்தைத் தொடங்கும் கம்பன் ஒரு மாபெரும் புலவன் உலகப் பெரும் புலவர்களின் முன்னணியில் முதல் வரிசையில் நிற்பவர். அவர் இயற்றியுள்ள கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியம் உலகப் பேரிலக்கியங்களின் முதல் வரிசையில் உள்ள பெருங்காவியம். அந்த மாபெரும் காவியத்தின் சிறப்புகள் பன்முகத் தன்மை கொண்டதாகும்.

கம்பரால் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் இராமாயணப் பெருங் காவியத்திற்கும் பெருமை ஏற்பட்டிருக்கிறது. கம்பராமாயணப் பெருங்காவியத்தால் கம்பனுக்கும் தமிழ் மொழிக்கும், தமிழ் நாட்டிற்கும் பெரும் பெருமை ஏற்பட்டிருக்கிறது.

வால்மிகி இராமாயணத்தில் இராமன் சிறந்த மனிதன், சிறந்த ராஜகுமாரன், மிகச் சிறந்த ஒழுக்கங்களையும், பண்புகளையும், நற்குணங்களையும், நற்செயல்களையும், கொண்ட மாவீரன். வீரம் வில்லாற்றல், விவேகம் நிறைந்த சிறந்த வீரன். மனிதகுலத்திற்கு முன்னுதாரணமானவன். அத்தகைய கல்யாண குணங்களையும் சிறப்புகளையும் கொண்டவன். அதனால் அந்த பேராற்றல் கொண்ட பெருமான் கல்யாணராமன் என்று அழைக்கப்படுகிறான்.

கம்பராமாயணத்தில் இராமன் சிறந்த மனிதன் மட்டுமல்ல, அவர் திருமாலின் அவதாரம், திருமாலின் பூரணாவதாரம், இப்பூமி யில் பிறந்து வளர்ந்து அத்தனை பயிற்சிகளையும் பெற்ற பலரையும் ஒன்று திரட்டி அணி சேர்த்துத் தனது மகத்தான அவதாரக் கடமையை நிறைவேற்றும் மாவீரன். அந்த மாமனிதனுக்கு, அத்தனை பண்புகளையும் கல்யாண குணங்களையும் கொண்ட மாமனிதனுக்கு, அவன் தனது அவதாரக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பலரும் துணை நிற்கிறார்கள் ஒத்துழைக்கிறார்கள்.

தனது அன்புக்குரிய சகோதரர்கள், அறிவிலும், முழுமையான ஞானத்திலும் முதிர்ச்சி பெற்ற முனிவர்கள், இயற்கை சக்திகள், பக்தர்கள், வானரப் பெரும்படை, வீடணனும் அவனுடைய அமைச்சர்களும், தேவர்கள், பறவைகள் (ஜடாயு, கலுழன்) சமுத்திர ராஜன் மற்றும் வேறுளகுழுக்களும், இவ்வாறான அனைவரும் இராமபிரானுக்குத் துணையாக நிற்கிறார்கள். உலகில் நல்ல காரியங்களை நிறைவேற்றுவதற்கு பலருடைய துணையும் ஒத்துழைப்பும் நல்லாதரவும், நல்லாசியும் தேவைப்படுகிறது.

## ஒரு மாபெரும் காவியம்

கம்பராமாயணம், வால்மிகி இராமாயணத்திற்கு அடுத்தபடியாக அதற்கு ஈடு இணையாகத் திகழும் ஒரு மாபெரும் காவியமாகும். அது ஒரு பெரும் பக்தி நூல். அது பாரத நாடெங்கும் சிறந்த பக்தி நூலாகப் பாராயணம் செய்யப்படுகிறது. பரதனும் இலக்குவனும், வீடணனும், சிறந்த இராம பக்தர்களாக, ஆழ்வார்களுக்கு நிகராகப் பாராட்டப்படுகிறார்கள் போற்றப்படுகிறார்கள்.

அனுமன் சிறந்த இராம பக்தன். இராம தூதன். இராமாயணப் பெருங் காவியத்தில் அனுமனுக்கு ஈடான ஒரு பாத்திரமில்லை. அனுமனைப் பற்றிக் குறிப்பிடும்போது, உயிர் போகும் தறுவாயில் இருந்த வாலி இராமனிடம், எனக்கு பதில் ஆற்றல் மிக்க அனுமனை உனக்குத் துணையாக வைத்துக் கொள். அனுமன் உனது தனுவுக்குச் சமமாகும். என்று கூறுகிறான். இராமபிரானே அனுமனை சொல்லின் செல்வன் என்று குறிப்பிடுகிறார். அந்தச் சொல்லின் செல்வன் அனுமன் ஆற்றிய அருஞ் செயல்களுக்கு நிகரில்லை. கடலைத் தாண்டியதும், சீதையைத் தேடிக் கண்டு பிடித்ததும், அவளுடன் பேசி அடையாளம் பெற்று இராமனிடம் திரும்பி வந்து அறிவித்ததும், சீதையைக் கண்டு விட்டுத் திரும்பிய போது அரக்கர்களோடு போரிட்டுப் பலரைக் கொன்றதும், இலங்கை மன்னனை சந்தித்ததும் தூது பேசியதும், இலங்கை மாநகரைத் தீக்கிரையாக்கியதும், யுத்தத்தின் போது, வடதுருவம் வரை சென்று

சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து போர்க்களத்தில் மாண்டவர்களை எழுப்பியதும் போர்க்களத்தில் வீரசாகசங்கள் செய்ததும் ஆகிய அனைத்தும் பாரத மக்களுடைய உள்ளத்தில் நீங்காத இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகளாகும். எனவே அனுமனுடைய சிறந்த இராம பக்தியைப் பாராட்டும் வகையில் பாரத மக்கள், வைணவ கோயில்களில் அனுமனுக்கு என தனி சன்னதிகளும், அனுமனுக்கென தனிக் கோவில்களும் அமைத்து வழிபட்டு வருகிறார்கள்.

இராமாயணம் ஒரு சிறந்த பக்தி நூலாக நமது பூஜை அறைகளிலே வைத்துப் போற்றுகிறோம். இராமபிரானுடைய அவதாரப் பெருமைகளைப் பாராட்டி வழிபடுகிறோம்.

கம்பராமாயணம் தமிழ் மொழியில் அமைந்துள்ள மிகச் சிறந்த இலக்கிய நூலாகும். தமிழ் மொழியின் ஐந்திலக்கணங்களும் சிறப்பாக அமைந்த பெரு நூலாகும. ஏராளமான புதிய வளமான தமிழ்ச் சொற்களும், உவமைகளும், பல செய்திகளும் நிறைந்த பெருங்காவியமாகும். கம்பராமாயணம் தமிழ் மொழியைப் பெரும் அளவில் வளப்படுத்தியிருக்கிறது. பண்டிதர் முதல் பாமரர் வரை பாராட்டுதல் பெற்று தலை சிறந்த இலக்கிய நூலாக மக்களுடைய உள்ளங்களில் நிறைந்து நிலை பெற்றிருக்கிறது.

இராமாயணம் பாரத நாடு தோற்றுவித்துள்ள மாபெரும் இதிகாசம் என்று புகழ் பெற்றிருக்கிறது. பாரத நாடு தோற்றுவித்த இரண்டு இதிகாசங்கள் இராமாயணமும், மகாபாரதமுமாகும். அவை இரண்டும் பாரதத்தின் இரு கண்கள்.

இராமாயணம் இராமனுடைய பூரணாவதாரத்தையும், மகாபாரதம் கிருஷ்ண பரமாத்வினுடைய பரி பூரணாவதாரத்தையும் அவர்களுடைய அருஞ்செயல்களையும் பெருமைகளையும் விளக்குவதாகும்.

வால்மீகி இராமாயணமும் இதர மொழிகளில் உள்ள இராமாயணக் காவியங்களும் தமிழில் உள்ள கம்பராமாயணமும்

தலை சிறந்த காவியங்களாகும். சொல் நயம், பொருள் நயம், சந்தம், எதுகை, மோனை, கவிதைச் சிறப்பு ஒப்பீடுகள், இலக்கணம் ஆகியவைகள் நிறைந்த தலை சிறந்த காவியங்களாகும். பாராயணம் செய்ய வேண்டிய சிறந்த கவிதைகள் நிறைந்ததாகும். இந்த இரு இதிகாசங்களும் பாரத நாட்டின் சிறந்த கலாச்சாரச் சிறப்புகளை உலகுக்கு எடுத்துக் காட்டுவதாகும்.

கம்பராமாயணம் தமிழ் மொழியில் சிறப்பு மிக்கதொரு பெரிய பண்டித நூலாகும். தகுந்த ஆசிரியர்களை வைத்துப் பலகாலம் படித்துப் பயிற்சி பெற வேண்டிய பண்டித நூலாகும். இலக்கணச் சிறப்புகளும் நிறைந்த பாட நூலாகும். நமது கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும், உயர் கல்வி நிலையங்களிலும் பாடமாக வைத்து படிக்க வேண்டியதும், ஆராய்ச்சி செய்ய வேண்டியதுமான அரிய பண்டித நூலாகும்.

இவ்வாறாக இராமாயணத்தைச் சிறந்த பக்தி நூலாக, மாபெரும் இலக்கிய நூலாக பாரத நாட்டின் பேர் இதிகாசமாக, தலைசிறந்த மகா காவியமாக, மிகப் பெரிய பண்டித நூலாக அதன் பன்முகத் தன்மைகளையும் படிக்கிறோம். பாராயணம் செய்கிறோம். இலக்கிய ஆய்வுகள் செய்கிறோம்.

## அரசியல் காவியம்

எல்லாவற்றிற்கும் மேலாக இராமாயணம் ஒரு பெரிய அரசியல் நூலாகவும் நாம் காண வேண்டும். இராமபிரானை முன்னுதாரணமாக வைத்து இராம ராஜ்யம் என்னும் கருத்து வடிவம் பாரத நாட்டு மக்களுடைய உள்ளங்களில் பதிந்திருக்கிறது.

இராமாயண காலத்தின் அரசியலுக்கு அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை ஆகியவை அரசியல் களங்களாக அமைந்திருக்கின்றன.

தசரதன், இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கனன் ஆகியோர், அயோத்தியின் அரசனும் அரச குமாரர்களுமாவார்கள். வாலியும் சுக்ரீவனும் கிட்கிந்தையின் அரசர்கள். இராவணன்,

கும்பகருணன், வீடணன், இந்திரசித்தன், அதிகாயன், அட்சயகுமாரன் ஆகியோர் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பில் அங்கம் வகித்த அரசனும் அரச குடும்பத்தினரும் அரச குமாரர்களுமாவர். இவர்களைத் தவிர மூன்று களங்களிலும் அரச குடும்பத்தினரும், அமைச்சர்களும், படைத்தளபதிகளும், தூதர்களும் வருகிறார்கள். அரசியல் அணுகும் முறைகளும் பேசப்படுகின்றன.

இராமாயணக் கதையில் சக்திமிக்க ஆயுதங்களையும் படை பலத்தையும் பல வீரர்களையும் சந்திக்கிறோம். இராமன், இலக்குவன், கரன்தூடணன், வாலி, சுக்ரீவன், அனுமன், அங்கதன், வீடணன், மற்றும் இராமனுடைய அணியில் இருந்த வானர வீரர்கள், இலங்கையில், இராவணன், கும்பகருணன், வீடணன், இந்திரசித்தன், அதிகாயன், அட்சயகுமாரன் மற்றும் பல இலங்கையின் வீரர்கள் ஆகியோர்களையும் அவர்களுடைய போர்களையும் வியூகங்களையும், உபாயங்களையும், சாகசங்களையும் காண்கிறோம்.

இராமாயணக் கதையில் இந்த வீரர்களைச் சந்திப்பதுடன், கதையின் நிகழ்ச்சிப் போக்குகளில் பல அரசியல் பிரச்னைகளையும் சந்திக்கிறோம்.

அத்துடன் அரசியல் நெறிமுறைகளைப் பற்றியும், ராஜநீதிப் பற்றியும் ஆட்சி முறைகளைப் பற்றியும் பல கருத்துக்கள் பேசப்படுவதையும் விவாதிக்கப்படுவதையும், போதிக்கப்படுவதையும் காண்கிறோம். எனவே இராமாயண மகாகாவியம் அடிப்படையில் அரசியல் மற்றும் சமூக நீதிக்காவியமாக அமைந்திருப்பதைப் பார்க்கிறோம்.

# 4. மாமுனிவர்களின் சந்திப்புகள்

இராமாயண மகாகாவியத்தில் வசிட்டன், விஸ்வாமித்திரன், பரசுராமன், அகத்தியன், ஆகிய மகாமுனிவர்கள் வருகிறார்கள். அவர்கள் பாரதத்தின் சிறந்த ஞானிகள். மகா வீரர்கள். வேதங்களும் உபவேதங்களும் தனுர் வேதமும் முழுமையாகக் கற்றவர்கள். கடுமையான தவங்கள் செய்து பலம் பெற்றவர்கள். அரசியல் ஞானம் மிக்கவர்கள். ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள். அரச குமாரர்களுக்கு கல்வி மற்றும் இதர கலை ஞானங்களையும் கற்றுக் கொடுப்பவர்கள். இராஜகுருக்கள், பேராசிரியர்கள், மந்திரம், தந்திரங்களையும் அவைகளை செயல்படுத்தும் வழிமுறைகளையும் கற்றவர்கள். கற்பிப்பவர்கள் மகாமுனிவர்களில் சிறந்தவர்கள்.

வசிட்டர் அந்தண முனிவர்களின் தலைவர், வசிட்டர் வாக்கு வேதவாக்காகக் கருதப்படும் அளவிற்கு மிகவும் உயர்வானவர். ரகுவம்சத்தின் ராஜகுரு சிறந்த கல்விமான், சதுர் வேதங்களையும் உபவேதங்களையும், தனுர் வேதத்தையும் உபநிடங்களையும் புராணங்களையும் நீதி சாஸ்திரங்களையும் அர்த்த சாஸ்திரங்களையும், தர்ம சாஸ்திரங்களையும் நன்கு கற்றவர், கற்பிப்பவர்.

விஸ்வாமித்திர மாமுனிவருக்கே பிரம்மரிஷி பட்டம் கொடுத்தவர் வசிட்ட முனிவர். விஸ்வாமித்திர மாமுனிவர், அரசனாக இருந்து, அரச பதவியைத் துறந்து, ராஜ்ய பாரத்தைத் தனது மக்களிடம் ஒப்படைத்து விட்டுக் கடும் தவம் மேற்கொண்டு, பிரம்மரிஷி பட்டத்தையும் பதவியையும் அடைய விரும்பினார். க்ஷத்திரிய குலத்தில் பிறந்து அரச பதவி வகித்து வந்தால் பிரம்மரிஷி பட்டத்தைப் பெற முடியாது என்றும் வசிட்டரும் இதர ரிஷிகளும் மறுத்து விட்டார்கள். நான் பிரம்மரிஷி பட்டத்தை அடைந்தே தீருவேன் என்று விஸ்வாமித்திரர் மேலும் கடுமையான தவம் புரிந்து வசிட்டருடனும் கடும்போர் நடத்தி அதில் வெற்றி பெற முடியாமல் மேலும் கடுமையான தவம் புரிந்து தனது உடம்பை மரக்கட்டை போல் ஆக்கிக் கொண்டு விட்டார்.

விஸ்வாமித்திரனுடைய கடுந்தவத்தின் வெம்மை தாங்க முடியாமல் கடைசியில் வசிட்டர் இரங்கி வந்தார். அந்தணரான வசிட்டருக்கும் க்ஷத்திரியரான விஸ்வாமித்திர மாமுனிவருக்கும் சமரஸம் ஏற்பட்டது. வசிட்டரே முன் வந்து வாராய் பிரம்மரிஷி என்று விஸ்வாமித்திரரை அழைத்துக் கட்டி அணைத்து அவரை பிரம்மரிஷியாக அங்கீகரித்தார். அன்று முதல் விஸ்வாமித்திரர் பிரம்மரிஷியானார். எனவே இதர வல்லமையும் ஆற்றலும் தவ வலிமையும் செயல் திறனும் தகுதி நிலையும் பெற்றவர்களுக்கு பிரம்மரிஷி பட்டம் வழங்குவதற்கு வசிட்ட மகரிஷி தகுதி பெற்றவர்.

அத்தகைய உயர்வான வசிட்ட மகரிஷி ரகுவம்சத்தின் குலகுருவாக இருந்து அந்த மன்னர்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர். தசரதச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளின்படி அவருக்காகப் புத்திர காமேஷ்டியாகத்தை முன்னின்று நடத்தினார். அதன் பலனாக தசரதனுடைய மூன்று மனைவியருக்கும் நான்கு ஆண் குழந்தைகள் பிறந்தனர். அதில் இராமன் மூத்தவன், இராமன் முதலிய நால்வருக்கும் வசிட்டர் கல்வியும் சகல கலைகளும் சகல வித்தைகளும் கற்பித்தார். அவ்வாறு வசிட்ட மாமுனிவர் மூலம் இராமன் கல்வியும், ஆயுதப் பயிற்சிகளும் வில் வித்தையும் அரசியல் பயிற்சியும், இதர பயிற்சிகளும் பெற்று சிறந்த இராஜ குமாரனாக விளங்கினார்.

## விஸ்வாமித்திரர்

இவ்வாறு ஸ்ரீராமன் வசிட்டருடைய நேரடியான பயிற்சி அளிப்பின் மூலம் சகல கலைகளிலும் வித்தைகளிலும் தேர்ச்சி பெற்று, சகல கல்யாண குணங்களையும் பெற்று இளம் பருவத்தை எய்தினார்.

அப்போது ஒரு நாள் பிரம்மரிஷியான விஸ்வாமித்திர மாமுனிவர் தசரதனுடைய அரண்மனையை அடைந்தார். தான் நடத்த விருக்கும் ஒரு யாகத்திற்கு அரக்கர்களின் தொல்லைகளிலிருந்து

வில் முரிந்து விட்டது, இராமன் அப்போட்டியில் வெற்றி பெற்று சீதையைக் கைப் பிடித்தான். இராமன் சீதை திருமணம் நடந்து முடிந்தது.

இராமனுடன் அவனுடைய சகோதரர்களுக்கும் மிதிலையில் திருமணங்கள் நடந்து முடிந்தன. பின்னர் சில நாள் புதுமணத் தம்பதிகளும், தசரதச் சக்கரவர்த்தியும் பரிவாங்களும் மிதிலையில் தங்கி விட்டு, அயோத்தி திரும்பினர். வழியில் அவர்களை இடை மறித்து பரசுராமன் தடுத்தார்.

கல்யானராமன் – பரசுராமன் சந்திப்பு நிகழ்ந்தது. அது பற்றி விவரமாக அடுத்த அத்தியாயத்தில் பார்ப்போம். இந்த சந்திப்பில் பரசுராமனுடைய கையில் இருந்த விஷ்ணு தனுசும், அவருடைய தவ பலம் முழுவதும் இராமனுக்கு சேர்ந்தது.

கடைசியாக ஆரண்ய காண்டத்தில் ஸ்ரீராமன் – அகத்திய முனிவர் சந்திப்பு நிகழ்கிறது. அகத்திய மாமுனி மிகவும் சக்தி வாய்ந்த மந்திரங்களையும் தந்திரங்களையும் இராமனுக்கு கற்றுக் கொடுத்தும் ஆயுதங்களையும் வில் அம்புகளையும் அம்புக் கூடுகளையும், கேடயங்களையும், கவசங்களையும் கொடுத்தும் ஆசீர்வதிக்கிறார்.

இவ்வாறாக மாமுனிவர்களான வசிட்டர், விசுவாமித்திரர், பரசுராமர், அகத்தியர் ஆகியோர் மூலம் கல்விப் பயிற்சியும், சக்தி ஆயுதங்களும், ஆயுதப் பயிற்சியும், மந்திர தந்திர பயிற்சிகளும், தாக்குதல் கருவிகளும், தற்காப்புக் கருவிகளும் பெற்று, வேறுள குழுக்களையெல்லாம் வெல்வதற்கான சக்தியையும் அரக்கர்களை வென்றொழிப்பதற்கான ஆற்றலையும் பெற்று முழுமனிதனாக முதிர்ச்சி பெறுகிறார் ஸ்ரீராமபிரான்.

மானுடப்பிறவி எடுத்து, அரச குடும்பத்தில் பிறந்து அனைத்து பயிற்சிகளையும் பெற்று வனவாசமும் மேற்கொண்டு சகல இன்ப துன்பங்களையும் அனுபவித்து, அரக்கர்களை வென்று அறத்தை

நிலை நிறுத்தி மகத்தான வரலாற்றுக் கடமைகளை இராமாவதாரத்தில் ஸ்ரீமன் நாராயண மூர்த்தி நிறைவேற்றுவதைக் காண்கிறோம். அந்த மகத்தான் காட்சியை கம்ப நாடர் நமக்குக் காட்டுகிறார். நாமும் அந்த கவிச் சக்கரவர்த்தி பெரும் புலவன் கம்ப நாடன் இயற்றிய மகாகாவியத்தைப் படித்து ஸ்ரீராமபிரானுடைய கல்யாண குணங்களை அறியும் பேற்றையும் பெருமையையும் பெற்றிருக்கிறோம்.

## 5. பரசுராமாவதாரம்

பரசுராமர் திருமாலின் அவதாரமாகும். அதிலும் முக்கியமான பத்து அவதாரங்களில் ஒன்றாகும். பிராமண குலத்தில் பிறந்து வீரமும் வேகமும் போர்க் குணமும் கொண்டவராக விளங்கிக் கடைசியில் சாந்தமடைந்து தன்னிடமிருந்த விஷ்ணு தனுசையும் தன்னுடைய தவ வலிமையையும் கல்யாண ராமரிடம் கொடுத்து விட்டு மீண்டும் தவம் செய்ய மலைக்குச் சென்றவர்.

இருசிக முனிவர் என்பவருக்குத் தன்னுடைய மனைவி சத்தியவதி மூலமாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு ஜமதக்கினி என்னும் பெயரிட்டனர். அவர் சிறந்த முனிவராக வளர்ந்து வந்த போதிலும் க்ஷத்திரியர்களுக்குரிய கோபம் வீரம் போன்ற குணங்களும் அவரிடம் இயல்பாக அமைந்திருந்தன.

ஜமதக்கினி – ரேணுகா தேவி தம்பதியினருக்குப் பல புதல்வர்கள் பிறந்தனர். கடைசியாக ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் அம்சமாகப் பரசுராமர் பிறந்தார்.

அக்காலத்தில் கேகய நாட்டில் கார்த்தவீரியார்ச்சுனன் என்னும் பெயரில் க்ஷத்திரிய வம்சத்து அரசன் ஆண்டு வந்தான். அவன் மிகுந்த வல்லமையும் செல்வாக்கும் மமதையும் கொண்டு தன்னிகரில்லாமல் ஆட்சி நடத்தி வந்தான்.

கார்த்தவீரியார்ச்சுனன் தத்தாத்ரேய பகவானின் அருளால் ஆயிரம் கைகளையும், யாராலும் வெல்ல முடியாத பெரும் பலத்தையும் பராக்கிரமத்தையும் பெற்றிருந்தான். அத்துடன் இந்திரிய பலமும் கீர்த்தியும் ஏராளமான செல்வத்தையும் பெற்றிருந்தான். இதனால் அவன் எந்தவிதமான அச்சமும் தாட்சண்யமும் இன்றி பெரும் வீரனாய் உலகம் முழுவதும் சுற்றி வந்தான். தனக்கு நிகர் யாரும் இல்லை என்று கர்வமும் அகங்காரமும் கொண்டிருந்தான்.

ஒரு சமயம் கார்த்தவீரியார்ச்சுனன் பரிவாரங்களுடன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றிருந்தான். நீண்ட நேரம் வேட்டையாடினான். அதனால் களைப்படைந்தான். பசி, தாகம் அவனையும் அவனுடைய படை வீரர்களையும் கடுமையாக வாட்டியது. அப்போது அருகில் ஒரு ஆசிரமம் தென் பட்டது. அது ஜமதக்கினி முனிவரின் ஆசிரமமாக இருந்தது. கார்த்தவீரியார்ச்சுனன் அந்த ஆசிரமத்திற்குச் சென்று அங்கு தனது படை பரிவாரங்களுடன் தங்கினான்.

அந்த நேரத்தில் ஆசிரமத்தில் ஜமதக்கினி முனிவர் மட்டுமே இருந்தார். அவருடைய புதல்வர்கள் வெளியில் சென்றிருந்தனர். அரசனும் அவருடைய படை பரிவாங்களும் பசி தாகத்துடன் இருப்பதைக் கண்ட முனிவர் தனது காமதேனு பசுவின் மகிமையால் அரசனுக்கும் அவனுடைய படை பரிவாரங்களுக்கும் நல்ல ருசியான அறுசுவை உணவும் நீரும் பாலும் பரிமாறினார். அவர்களுக்கு வேண்டிய எல்லா சௌகர்யங்களையும் செய்து கொடுத்தார். சற்று நேரம் அங்கு தங்கி ஓய்வு எடுத்து விட்டு முனிவரிடம் விடை பெற்றுக் கொண்டு கார்த்தவீரியார்ச்சுனன் தனது படை பரிவாரங்களுடன் தனது நாடு திரும்பினான்.

நாடு திரும்பிய மன்னன் தனது அரண்மனைக்குச் சென்று அமர்ந்த பின்னரும் ஆசிரமத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிய நினைவாகவே இருந்தான். அந்த அதிசயத்தைப் பற்றி எண்ணி ஆச்சரியப்பட்டான்.

காட்டில் ஒரு ஆசிரமத்தில் வாழும் ஒரு முனிவருக்கு இவ்வளவு சக்தியா என்று சிந்திக்கத் தொடங்கினான். காமதேனுவை எண்ணி ஆச்சரியப்பட்டான். அந்தக் காமதேனு தன்னிடமிருந்தால் பெரும் உதவியாக இருக்கும் என்று கருதினான்.

தன்னை விடப் பராக்கிரமத்தில் சிறந்தவர் எவரும் இல்லை என்னும் இறுமாப்பில் கார்த்தவீரியார்ச்சுனன் தனது படைகளை அனுப்பி காமதேனுவை கவர்ந்து வரச் செய்தான். தன்னை யாரும் ஒன்றும் செய்து விட முடியாது என்று மன்னன் ஆணவம் கொண்டிருந்தான். அக்காலத்திய மன்னர்கள் பலரிடமும் தாங்கள்

க்ஷத்திரிய அரசர்கள் படை பலமும் பராக்கிரமும் கொண்டவர்கள், தாங்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்னும் ஆணவம் மிகுந்திருந்தது.

வெளியில் சென்றிருந்த ஜமதக்கினியின் புதல்வர்கள் ஆசிரமம் திரும்பிய போது நடந்ததை அறிந்து அரசன் மீது மிகுந்த கோபம் கொண்டனர். ஜமதக்கினி முனிவரின் புதல்வர்களில் இளையவர் பரசுராமர். அவர் கடுங் கோபம் கொண்டார். தன்னுடைய சிறப்பு ஆயுதமான கோடரி மற்றும் வில் அம்பு பாணம் முதலிய ஆயுதங்களை எடுத்துக் கொண்டு நாட்டை நோக்கி ஓடினார்.

கார்த்தவீரியார்ச்சுனன் தனது பெரும் படையைச் திரட்டி ஆயுதபாணியாக வந்த பரசுராமனை எதிர்த்தான். இருவருக்கும் கடுமையான போர் நடந்தது.

பரசுராமர் மிகவும் உக்கிரமான போர் நடத்தி மன்னனின் படைகளையெல்லாம் கொன்று குவித்தார். கார்த்தவீரியார்ச் –சுனனுடைய ஆயிரம் கைகளையும் அவனுடைய தலையையும் வெட்டி வீழ்த்தினான்.

அரசனுடைய புதல்வர்களும் எஞ்சிய படை வீரர்களும் பயந்து நடுங்கி பரசுராமரின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக் காமதேனுவை அவரிடம் ஒப்படைத்தனர். பரசுராமரும் காமதேனுவை அழைத்துக் கொண்டு அரசனுடைய புதல்வர்களையும் படை வீரர்களையும் மன்னித்து அனுப்பி விட்டார்.

பரசுராமர் காமதேனுவை அழைத்துக் கொண்டு வந்து தந்தையிடம் ஒப்படைத்தார். போர் நடந்த விவரங்களைத் தந்தையிடம் எடுத்துக் கூறினார். கடும் போர் நடந்தது குறித்தும் அதில் கார்த்தவீரியார்ச்சுனன் கொல்லப்பட்டது குறித்தும் கேள்விப்பட்டு ஜமதக்கினி முனிவர் மிகவும் வருத்தப்பட்டார். பரசுராமரிடம் கூறினார். மகனே நீ கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்றது மி கவும் பாவமான காரியம். பிராமண குலத்தில் பிறந்த நீ இவ்வாறு செய்திருக்கக் கூடாது. ஆவேசம் கொண்டு விட்டாய். பிராமண குலத்திற்குப் பெருமை தருவது பொறுமையே யாகும். நீ அதை

இழந்து விட்டாய் தெய்வ அம்சம் பெற்ற ஒருவரின் அருள் பெற்ற அரசனைக் கொன்றதால் உனக்கு பிரம்மஹத்தி தோஷத்தைக் காட்டிலும் கொடிய தோஷம் பற்றியிருக்கும். அதற்கு நீ தக்க பரிகாரம் செய்ய வேண்டும். எனவே ஸ்ரீமன் நாராயணனை எண்ணிப் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து புண்ணிய தீர்த்தங்களிலே நீராடி உன் பாவத்தைப் போக்கிக் கொண்டு வா என்று கட்டளையிட்டார். பரசுராமனும் அதை ஏற்றுக் கொண்டு தந்தையை வணங்கி அவரிடம் ஆசி பெற்றுக் கொண்டு மற்ற தனது சகோதரர்களிடமும் தாயிடமும் மற்ற அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டுத் தீர்த்த யாத்திரை புறப்பட்டார்.

தந்தையின் கட்டளையின் படி பரசுராமர், பல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கும், யாத்திரைச் சென்று பல புண்ணிய நதிகளிலும் இதர தீர்த்தங்களிலும் நீராடி விட்டு ஓராண்டில் திரும்பி வந்தார்.

ஒரு நாள் ஜமத்தக்கினி முனிவரின் மனைவி ரேணுகா தேவி வழக்கம் போல் தண்ணீர் கொண்டு வருவதற்காகக் கங்கை ஆற்றிற்குச் சென்றாள். அப்போது கங்கை நீரில் சித்திர ரதன் என்னும் பெயருடைய கந்தருவன் ஒருவன் தேவலோகப் பெண்களுடன் நீராடி விளையாடிக் கொண்டிருந்தான். அந்த கந்தருவனுடைய அழகைக் கண்டு மயங்கி ரேணுகா தேவி சஞ்சலமடைந்தாள். நீண்ட நேரம் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நேரம் அதிகமாகி விட்டது பின்னர் நேரமானதைக் கண்டு திடுக்கிட்டு ரேணுகா தேவி சுய உணர்வு பெற்றுக் குடத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டு வேகமாக ஆசிரமத்திற்குத் திரும்பினாள்.

காலதாமதம் ஆனதைக் கண்டு ஜமதக்கினி தனது ஞான சக்தியால் காரணத்தை அறிந்தார். ரேணுகா தேவி சித்திர ரதனுடைய அழகைக் கண்டு மயங்கி நின்றதை நினைத்துக் கோபமடைந்தார்.

ஜமதக்கினி முனிவர் தனது பிள்ளைகளை அழைத்துக் கற்பு நெறி தவறிய அவர்களுடைய தாயை தலையை வெட்டிக் கொன்று

விடும்படிக் கட்டளையிட்டார். பிள்ளைகள் யாரும் தாங்கள் தாயைக் கொல்வதற்கு முன் வரவில்லை. ஜமதக்கினி முனிவர் மேலும் கோபம் அடைந்தார். அவருடைய கோபம் பிள்ளைகள் மீதும் ஏற்பட்டது.

அப்போது தீர்த்த யாத்திரை சென்றிருந்த பரசுராமர் தனது யாத்திரையை முடித்துத் திரும்பி வந்து கொண்டிருந்தார். ஜமதக்கினி முனிவர் பரசுராமரை அழைத்து இவளைக் கொன்று விடு, எனது கட்டளையை மீறிய இவர்களையும் (சகோதரர்களையும்) கொன்று விடு என்று ஆணையிட்டார்.

பரசுராமரும் தனது தந்தையின் ஆணையை சிரமேற்கொண்டு எந்த பதிலும் கூறாமல் தனது கூர்மையான ஆயுதமான கோடரியை எடுத்துத் தனது தாயின் தலையைச் சீவினார். தனது சகோதரர்களையும் கொன்றார்.

அதைக் கண்ட ஜமதக்கினி முனிவர் மகிழ்ச்சியடைந்து தனக்கு வேண்டிய வரங்களைக் கேட்டுக் கொள்ளும் படி தனது மகன் பரசுராமரிடம் கூறினார். உடனே பரசுராமரும் பட்டென்று தன்னால் கொல்லப்பட்ட தாயும், சகோதரர்களையும் உயிர் பெற்று எழ வேண்டும். தங்களால் முடிந்தால் அதைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

ஜமதக்கினி முனிவரும் தனது மகனின் வேண்டுகோளின் படி அவர் கேட்ட வரமளித்தார். பரசுராமரின் தாயும் (ரேணுகா தேவி) சகோதரர்களும் உயிர் பெற்றெழுந்தார்கள்.

## ஜமதக்கினி முனிவர் படுகொலை

கார்த்தவீரியார்ச்சுனன் கொல்லப் பட்ட போது காமதேனுவை திருப்பி ஒப்படைத்து விட்டு, அரசனுடைய பிள்ளைகள் பரசுராமனுக்குப் பயந்து ஓடியவர்கள் பின்னர் தந்தையின் நாட்டைத் தாங்கள் முடிசூட்டிக் கொண்டு ஆட்சி நடத்தி வந்தார்கள்.

அரச பதவிக்கு வந்த பின்னர், அவர்களுக்குக் கர்வம் வந்துவிட்டது. தாங்கள் அதிகாரமும் ஆயுத பலமும், பராக்கிரமும் பெற்றுள்ள மன்னர்கள் என்னும் மமதையும் தன்னகங்காரமும் தலை கனமும் அவர்களுக்கு ஏற்பட்டு விட்டது. தங்கள் தந்தையைக் கொன்ற அப்பரசுராமனைப் பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுடைய மனதில் ஏற்பட்டது. அதற்கான காலத்தையும் நேரத்தையும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் பரசுராமரும் அவருடைய சகோதரர்களும் வெளியே சென்றிருந்தார்கள். அப்போது ஜமதக்கினி முனிவர் தனியாக இருந்தார். கண்களை மூடிக் கொண்டு பகவானை நினைத்துக் தியானத்தில் அமர்ந்திருந்தார். அப்போது கார்த்தவீரியார்ச்சுனனுடைய பிள்ளைகள் அங்கு வந்தார்கள்.

நிஷ்டையில் இருந்த ஜமதக்கனி முனிவரைக் கொல்ல முயன்றனர். அதைக் கண்ட ரிஷி பத்தினி ரேணுகா தேவி ஓடி வந்து அவர்களைக் கொல்ல வேண்டாம் என்று கெஞ்சி முறையிட்டாள். ஆயினும் அவளுடைய கண்களுக்கு முன்பாகவே முனிவரின் தலையை வெட்டி, அத்தலையைத் தூக்கிக் கொண்டு தங்கள் நகரத்திற்கு ஓடி விட்டார்கள். ரேணுகா தேவி அலறிச் சத்தமிட்டாள். கதறிக் கூக்குரலிட்டாள்.

ரேணுகா தேவியினுடைய அலறல் சத்தம் கேட்டு, பரசுராமரும் அவருடைய சகோதரர்களும் ஓடி வந்தார்கள். நடந்த கோரமான சம்பவங்களைக் கண்டு துடித்துப் போனார்கள். தந்தையின் படுகொலையைக் கண்டு ஆத்திரமடைந்தனர். தந்தையின் உடலைக் காப்பாற்றி வையுங்கள். நான் இதோ உடனே வந்து விடுகிறேன் என்று கூறிவிட்டுப் பரசுராமர் தன்னுடைய பரசு (கோடாரி) யையும் இதர சக்தி ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு புயல் வேகத்தில் புறப்பட்டார்.

நகரத்தை அடைந்தார். கார்த்தவீரியார்ச்சுனனுடைய பிள்ளைகளை ஓடஓடவிரட்டி, அவர்களில் ஒருவர் கூட பாக்கியில்லாமல் கொன்று குவித்தார். அந்த க்ஷத்திரிய அரசர்கள் அனைவரும் மாண்ட பின்னரும்,

பரசுராமருடைய கோபம் தணியவில்லை. அரசர்கள் அறம் தவறி நடக்கிறார்கள் என்னும் கருத்து அவருடைய மனதில் ஆழமாகப் பதிந்தது. அரசர்கள் அனைவரின் மீதும் அரச குலத்தினர் மீதும் பரசுராமருக்குக் கடும் கோபம் ஏற்பட்டது. பூமண்டலத்தில் இனி க்ஷத்திரியர்களின் இராஜ வம்சமே இல்லாமல் அழிப்பேன்! என்று சபதம் செய்தார்.

பின்னர் பரசுராமர் அரசனுடைய அரண்மனையில் ராஜகுமாரர்கள் வைத்திருந்த தனது தந்தையின் தலையை மீட்டிக் கொண்டு வந்து தந்தையின் உடலுடன் ஒன்று சேர்த்தார். தன்னுடைய சகோதரர்களுடன் சேர்ந்து தந்தைக்குச் செய்ய வேண்டிய ஈமக் கடன்களை முறைப்படிச் செய்து முடித்தார்.

அகால மரணமடைந்தத் தனது தந்தையின் பொருட்டுப் பரசுராமர் யாகம் ஒன்றினைச் செய்தார். பலவிதமான தான தர்மங்களைச் செய்தார். அதன் பலனாக ஜமதக்கினி முனிவர், ரிஷிகளுடைய மண்டலத்தையடைந்து சப்தரிஷிகளில் ஒருவராகி ஏழாவது நட்சத்திரமாய் விளங்கி வருகிறார்.

பரசுராமர் தான் செய்த சபதத்தின்படி இருபத்தியொரு தலைமுறை பூமண்டலத்தின் மீது படையெடுத்து க்ஷத்திரிய குலத்தைச் சேர்ந்த அரசர்களையெல்லாம் கொன்று அந்த அரசுகளை எல்லாம் காசிப முனிவருக்குக் கொடுத்து விட்டு அதன் பின்னர் அமைதியடைந்து என்றும் சிரஞ்சீவியாய் இன்றும் மகேந்திர மலையில் சாந்த சொரூபியாகத் தவம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறார்.

இது பரசுராமருடைய சுருக்கமான வரலாறாகும். வியாச பகவான் அருளிச் செய்த பாகவத புராணத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களின் படி இங்கு பரசுராமருடைய சுருக்கமான வரலாறு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் பாகவத புராணத்தில் கல்யாண இராமனுடைய வரலாற்றைப் பற்றிக் கூறுமிடத்திலும் பரசுராமன் கல்யாண இராமன் சந்திப்பு பற்றிய செய்தி கூறப்பட்டிருக்கிறது.

## 6. க்ஷத்திரிய நாசம்

மிதிலையில் ஜனகராஜன் என்னும் மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய மகள் பெயர் ஜானகி. அவள் மகாலக்ஷிமியின் அவதாரம். ஜனகன் தனது மகளின் திருமணத்திற்கு ஒரு நிபந்தனை விதித்திருந்தான். அவனிடம் மிகப் பெரிய வில் ஒன்று இருந்தது. அது சிவனுடைய வில். எனவே அவ்வில் சிவ தனுசு என்று அழைக்கப்பட்டது. அந்த வில்லை எடுத்து நாணேற்றுகின்ற வல்லமை படைத்தவனுக்கே தன் மகள் ஜானகியைத் திருமணம் செய்து கொடுப்பதாக அறிவிப்பு செய்திருந்தார். பல மன்னர்களும் அதற்கு முயற்சித்து முடியாமல் சென்று விட்டனர்.

விசுவாமித்திரர், தனது யாகத்தை முடித்துக் கொண்ட பின்னர் இராமனையும், இலக்குவனையும் மிதிலைக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

அரசகுமாரர்களுடன் அரண்மனைக்குச் சென்றார். அந்த வில்லை எடுத்து நாணேற்றும்படி இராமனுக்குக் கட்டளை இட்டார்.

மிகவும் பளுவான பலம் பொருந்திய அந்த வில்லை இராமன் இலகுவாக எடுத்து வளைத்தார். நாணேற்ற முற்பட்டார். அப்போது அந்த வில் உலகமே நடுங்கும் படியானதோரு பேரொலியுடன் ஒடிந்து விழுந்தது.

பின்னர் இராமனுக்கு ஜானகியை ஜனக மகாராஜன் திருமணம் முடித்து வைத்தான். திருமணம் முடிந்த பின்னர் இராமர் தனது உற்றார் உறவினருடன், அயோத்திக்குத் திரும்பினார்.

திரும்பும் வழியின் பரசுராமரைக் கண்டார். இருபத்தொரு தலைமுறையாக க்ஷத்திரியர்களைக் கொன்ற பரசுராமர், ஸ்ரீராமரை அதாவது திருமணம் முடித்துத் திரும்பி வந்து கொண்டிருந்த கல்யாணராமரைத் தடுத்து நிறுத்தினார். இருவருக்கும் போர்

மூண்டது. இராமர் வெற்றி பெற்று பரசுராமருடைய வில்லை முறித்து அவருடைய ஆணவத்தை அடக்கினார் என்று பாகவத புராணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உலகில் பிறந்த ஒவ்வொருக்கும் தங்களுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டும். உலகில் தோன்றியுள்ள ஒவ்வொரு ஜீவராசியும் கூட தனது இயல்பான செயல்பாட்டில் தங்கள் கடமைகளை நிறைவேற்றியும் தங்கள் இன விருத்தியையும் செய்து கொள்கின்றன. புல், பூண்டு, செடி, கொடி, மரம் முதலிய தாவர இனங்களும் முளைத்து வளர்ந்து, பருவம் எய்தி பூ பூத்து, காய் காய்த்து, பழம் பழுத்து, விதையாக முதிர்ந்துத் தங்கள் கடமைகளை இயல்பாக நிறைவேற்றுகின்றன. பறவைகளும் கூட்டுச் சேர்ந்துத் தங்கள் கடமைகளை தன்னுணர்விலேயே இயல்பாகவே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றன.

மனிதன் அதிகமான அளவில் புலனறிவும் பகுத்தறிவும் பெற்றிருக்கிறான். எனவே அவன்/அவள் தனக்குரிய கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

*ஒருவர் தன்பால், தன் பெற்றோர் பால், கணவன்/மனைவி, மற்றும் குழந்தைகளின் பால், சகோதர, சகோதரிகளின் பால், உற்றார் உறவினர்களின் பால், வீட்டின் பால், ஊரின் பால், நாட்டின் பால், உலகின் பால் உள்ள கடமைகளை தன்னுணர்வில் மட்டுமல்லாமல், சித்தத் தெளிவுடன் உணர்வு பூர்வமாகவே நிறைவேற்ற வேண்டும்.*

இதையே நமது சாத்திரங்கள் தெளிவாக வலியுறுத்தி எடுத்துக் கூறுகின்றன. இதில் ஊனங்களும் குறைகளும் சேதங்களும் குழப்பங்களும் ஏற்படுகின்றன என்பதையும் காண்கிறோம்.

ஒரு மாணவன் தான் படிக்கும் போது மிகவும் கவனமாக ஆசிரியர்களிடம் பாடம் கேட்பதுடன் கவனம் எடுத்துப் படிக்க வேண்டும். பள்ளிப் படிப்புக்கு வாய்ப்பில்லாத பலரும் கூட சுய

படிப்பால் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். பாடங்கள், கல்விப் பயிற்சி மட்டுமல்ல சுயமுயற்சியால் தொழில் துறையில் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். வாழ்க்கையின் பல துறைகளிலும் பலரும் தங்கள் சொந்த முயற்சிகளால் முன்னேற்றம் கண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அனைவருக்கும் முன்னுதாரணங்களாகும்.

ஒரு ஆசிரியன் தன்னுடைய கற்றல் கற்பித்தல் கடமைகளை சீர்படச் செய்ய வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் கடமைகளை சரியாக நிறைவேற்றத் தவறினால், அந்த சமுதாயத்தில் சீரழிவுகளும் சிதைவுகளும் ஊனங்களும் ஏற்பட்டுவிடும்.

ஒரு அரசன் தனது ஆட்சிக் கடமைகளை சரிவர நிறைவேற்ற வேண்டும். இன்றைய நிலைமையில் ஒரு அரசியல்வாதி தனது நாட்டின் பால், சமுதாயத்தின் பால் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செம்மையாக நிறைவேற்ற வேண்டும். அதில் தவறினால் நாட்டில் குழப்பங்கள் ஏற்படும். ஊழல்களும் ஒழுக்கக் கேடுகளும் உள்சச்சரவுகளும் அடிதடிகளும், வெட்டு குத்துகளும், கொலைகளும், வழக்குகளும், விசாரணைகளும் ஏற்பட்டுவிடும். சமுதாயத்தில் குழப்பங்களும் அதிகமாகும்.

மகாகவி பாரதி பாஞ்சாலி சபதம் என்னும் ஒரு அருமையான சிறு காவியத்தை எழுதினார். அது ஒரு தலைசிறந்த காவியமாகும். அதைத் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். அதில்,

"சிந்தனையில் அறமுண்டாம் – எனிற்
சேர்ந்திடும் கலிசெயும் மறமு முண்டாம்"

என்று குறிப்பிடுகிறார். அதற்கு ஒரு பொருள் விளக்கம் கூறகிறார்.

" ஒரு சங்கத்தின், ஒரு ஜாதியின், ஒரு தேசத்தின் அறிவு மழுங்காதிருக்கும் வரை, அதற்கு நாச மேற்படாது. பாரத தேசத்திலே முற்காலத்திலே பாரத ஜாதி முழுமையின் அறிவுக்குப் பொருப்பாளியாகப் பிராமணர் என்னும் பெயருடைய ஒரு வகுப்பினர்

இருந்ததாகப் பழைய நூல்களிலே காணப்படுகிறது. அந்த பிராமணர் தமது கடமைகளைத் தவறாது நடத்தியிருப்பார்களானால் மற்ற குலத்தவரும் நெறி தவறியிருக்க மாட்டார்கள். மகா பாரதப் போர் நடந்திராது. பாரத தேசத்தில் பெரியதொரு க்ஷத்திரிய நாசமும் கலியும் வந்திருக்க மாட்டா.

ஒரு தேசத்திற்கு ஏற்படும் உயர்வு தாழ்வுகளுக்கு அத்தேசத்திலுள்ள பிராமணர்களே பொறுப்பாளிகளென மேலே குறிப்பிட்டுருப்பதை விளக்கும் பொருட்டு மகா பாரதப் போர் நடக்கும் முன்பாகவே முதற்படப் பாவம் பிராமணர்களுக்குள் புகுந்த தென்பதை நூல் தெரிவிக்கிறது'' என்று பாரதியார் குறிப்பிடுகிறார்.

மகா பாரதப் போரில் ஏற்பட்ட க்ஷத்திரிய நாசம் பாரதியாரை மிகவும் பாதித்திருக்கிறது. அந்த கோரமான க்ஷத்திரிய நாசத்தை நினைத்து பாரதியார் பல தடவை வருத்தமடைந்திருக்கிறார். கண் கலங்கியிருக்கிறார்.

பாரத நாட்டின் நீண்ட நெடிய வரலாற்றில் பெரும் நாசங்களை ஏற்படுத்திய நான்கு வரலாற்று நிகழ்ச்சிகளை இங்கு நினைவில் கொள்ளலாம்.

ஒன்று கார்த்தவீரியர்ச்சுனன் காலத்தில் க்ஷத்திரியர்களிடத்தில் (அதாவது ஆட்சியாளர்களிடத்தில்) ஏற்பட்ட அகம்பாவம், கொடுங்கோன்மை, அழிச்சாட்டம், அதனால் நாட்டில் ஏற்பட்ட கொடுமைகள், அவைகளை எதிர்த்து அந்தணர்களிடம் ஏற்பட்ட ஆவேசம், பரசுராமன் இருபத்தியொரு தலைமுறை க்ஷத்திரியர்களுக்கு எதிராக போர் செய்தது, அதனால் ஆயிரக் கணக்கான க்ஷத்திரியர்கள் மாண்டது, அதனால் ஏற்பட்ட க்ஷத்திரிய நாசம்.

அதன் பின்னர் பரசுராமன் தான் நடத்திய கொடுமையான பழி வாங்கும் செயலை நினைத்து வருந்தி அமைதியடைந்து மகேந்திர மலைக்குச் சென்று தவம் மேற்கொள்வது ஆகிய நிகழ்ச்சிகளைக் காண்கிறோம்.

க்ஷத்திரியர் என்றால் குலமல்ல குணம், க்ஷத்திரியர் என்றால் நாட்டின் உடல் பலம், படை பலம், ஆட்சித் திறன், வீரம், வைராக்கியம், தற்காப்பு ஆகியவைகளாகும். இதில் நாசம் ஏற்பட்டால் நாட்டில் நாசம் விளையும், சேதம் ஏற்படும்.

அக்காலத்தில் ஏற்பட்ட க்ஷத்திரிய நாசம் பாரத சமுதாயத்தின் தலைமையில் இருந்த அறிவுத் துறையில் சிறந்த அந்தணர்களுக்கும் (பிராமணர்களுக்கும்) ஆட்சித் துறையில் சிறந்து விளங்கிய அரசர்களுக்கும் (க்ஷத்திரியர்களுக்கும்) இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளும் மோதல்களும் காரணமாக இருந்து ஏற்பட்டிருக்கின்றன. இதில் இருதரப்புக்கிடையிலும் உடன்பாடு கண்டு நாட்டில் ஒற்றுமை ஏற்படுவதற்கு இராமாவதாரத்தில் பரசுராமன்–கல்யாணராமன் சந்திப்பு காரணமாக இருந்திருப்பது நமக்கு ஆறுதலளிப்பதாகும். பரசுராமன்– கல்யாணராமன் உடன்பாடும், க்ஷத்திரியன் அரசனாகவும், பிராம்மணன் அமைச்சனாகவும் இருந்து, நாட்டில் நல்லாட்சியை நடத்தி, சமுதாயத்திற்குத் தலைமை தாங்குவதற்கும், சமுதாயத்தை மேம்படுத்துவதற்கும் வழி கோலியது என்பதைக் காண்கிறோம்.

இரண்டாவதாக பாரதத்தில் ஏற்பட்ட மிகப் பெரிய க்ஷத்திரிய நாசம் மகாபாரதப் போரில் ஏற்பட்டதாகும். அது க்ஷத்திரியர்களுக்குள்ளேயே ஏற்பட்ட உள் முரண்பாடு காரணமாக ஏற்பட்டு தருமம் வெற்றி பெருகிறது. மகாபாரதப் போரில் பாரதத்தின் மாவீரர்களான பீஷ்மர், துரோணர், கர்ணன், சல்லியன், அபிமன்னன், கடோத்கஜன் முதலியோர் கொல்லப்பட்டதும், அஸ்வத்தாமன் விதுரனைப் போன்றவர்கள் செயலிழந்து போனதும் பாரத மண்ணிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

மூன்றாவதாக மேற்கு ஆசியாவிலிருந்தும் மத்திய ஆசியாவிலிருந்தும், பாரதத்தின் மீத ஏற்பட்ட அன்னியப் படையெடுப்புகளாகும். அந்தப் படையெடுப்புகளாலும் போர்களாலும் ஏற்பட்ட சேதங்கள் நமது கலாச்சாரத்திற்கும் நமது ஆலயங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் நமது பழம்பெரும் நாகரீக வளர்ச்சிக்கும் கல்வி முறைகளுக்கும் ஏற்பட்ட சவாலாகும்.

நான்காவதாக ஆங்கிலேயர் படையெடுப்புகளும் அவர்கள் நடத்திய ஆக்கிரமிப்புப் போர்களும் கொள்ளைகளும் கொடுங்கோலாட்சியும் நமது நாகரீகத்தையும் நமது ஆன்மாவையும் சேதப்படுத்தியிருக்கிறது.

இந்த அனுபவங்களிலிருந்த பாரதம் ஒரு புதிய ஆதர்சத்தைப் பெற்று விழிப்படைந்து வருகிறது. புத்தெழுச்சி பெற்று நடைபோடத் தொடங்கியிருக்கிறது. நமது நாட்டில் பிறந்துள்ள பல பெரியோர்கள் மகான்கள், அறிஞர்கள் நமக்கு வழிகாட்டி வருகிறார்கள். நமது இணையற்ற வீரர்கள் நமது நாட்டைத் தற்காத்து வருகிறார்கள். நமது நாட்டு மக்களிடையே நல்ல பல தொடர்புகளும் இணைப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. அதற்கு நமது இராமபிரானுடைய முன்னுதாரணம் நமக்கு ஆதர்சமாக அமைந்திருக்கிறது.

## 7. யுக சந்திப்பு

இராமாயணத்தில் பல முக்கிய சந்திப்புகள் நிகழ்கின்றன. அவை காவியக் கதையில் முக்கிய சந்திப்புகள் மட்டுமல்ல, முக்கியமான கதைக் திருப்பங்களுக்கும் காரணமாகின்றன. வசிட்டன் – விஸ்வாமித்திரன் சந்திப்பு, விஸ்வாமித்திரன்–தசரதன் சந்திப்பு, விஸ்வாமித்திரன்–ஜனக மகாராஜன் சந்திப்பு, கல்யாணராமன்–பரசுராமன் சந்திப்பு, இராமன்– குகன் சந்திப்பு, வனத்தில் இராமன்–பரதன் சந்திப்பு, இராமன்–அகத்தியன் சந்திப்பு, இராமன்–சூர்ப்பணகை சந்திப்பு, (புதிய நிமித்தம்) இராமன்–சுக்கிரீவன் சந்திப்பு, இராமன்–வாலி சந்திப்பு, அனுமன்–சீதை சந்திப்பு, அனுமன்–இராவணன் சந்திப்பு, இராமன்–வருணன் சந்திப்பு, இராமன்–வீடணன் சந்திப்பு, போர்க்கள சந்திப்புகள், போர்க்களத்தில் வீடணன்–கும்பகருணன் சந்திப்பு முதலிய சந்திப்புகளும் கதையில் முக்கியமான சந்திப்புகளாகும். இந்த சந்திப்புகளில் நடைபெற்ற உரையாடல்களும் சிறந்த கருத்துக்கள் நிறைந்தவை. இதில் கல்யாணராமன்–பரசுராமன் சந்திப்பு யுக சந்திப்பாகும்.

### அயோத்தி பயணம்

மிதிலையில் தசரதன் விஸ்வாமித்திரன், ஜனக மகாராஜன் மற்றும் அனைவர் முன்னிலையிலும் இராமன்–ஜானகி திருமணமும், மற்றும் இராமனுடைய சகோதரர்களுடைய திருமணங்களும் முடிந்து அவர்கள் அனைவரும் அவரவர்களின் துணைவியர்களும் படை பரிவாரங்களுடன் அயோத்தி திரும்பினர்.

இவ்வாறு தசரதன் முதல் இராஜ பரிவாரங்கள் அனைவரும் அயோத்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மயில் பறவை வலப் பக்கமாகவும் காகம் முதலிய பறவைகள் இடப்பக்கமாகவும் சென்றன. இவை சகுனத் தடையாக உள்ளனவே என்று தசரதன் பயணத்தை நிறுத்தி சகுனத் துறை ஆராச்சியாளனை அழைத்துக் கேட்டான். புள்ளின் குறி தேர்வாளரான அந்த ஆராய்ச்சியாளனும்

அதை ஆராய்ந்து இடையூறு இன்றே வரும் ஆயினும் அது நன்றாகி விடும் நன்மையாகவே முடியும் என்று கூறினான்.

பரசுராமன் வருகை

அப்போது வல்லமை பொருந்திய மாவீரன் பரசுராமன் வெகு வேகமாக மகா ஆவேசத்துடன் பஞ்ச பூதங்களின் வேகத்தில் உலகின் இறுதிக் காலத்தில் கோபக் கனலுடன் தோற்றமளிக்கும் சிவனைப் போல கோபத்துடன் இராமனுக்கு எதிரே வந்து நின்றான்.

பரசுராமன் வருகையைப் பற்றி கூறும் போது கம்பன்

“பாழிப்புயம் உயிர்த்திக்கிடை
அடையப்புடை படரச்
சூழிச்சடை முடிவிண் தொட
அயல்விண் மதி தொத்த
ஆழிப்புனல், எரி, கால், நிலம்
ஆகாயமும் அழியும்
ஊழிக் கடை முடிவில் தனி உமை
கேள்வனை ஒத்தான்”

என்று குறிப்பிடுகிறார்.

திசைகள் அனைத்தையும் தொடக் கூடிய உயர்ந்த விரிந்த தோள்களையும், விண்ணையும் தொடக்கூடிய சடை முடிகளையும் கொண்ட வல்லமை மிக்க பரசுராமன் கோபக் கனலுடன் வந்த தோற்றம் கடல் நீர், நெருப்பு, காற்று, நிலம், ஆகாயம் ஆகிய பஞ்ச பூதங்களும் அழிகின்ற ஊழிக் காலத்தின் இறுதியில் கோபக் கனலுடன் நிற்கும் உமையின் கணவனான சிவனைப் போல இருந்தது என்று பரசுராமன் கோபத்துடன் வந்த காட்சியை சிவனுடைய கோபக் கனலுடன் ஒப்பிட்டுக் கம்பன் எடுத்துக் கூறுகிறார்.

பரசுராமன் கோபாவேசத்துடன் தனது வல்லமை மிக்க மழுப் படையுடன் இராமனுக்கெதிரில் வந்து நின்ற போது தசரதச் சக்கரவர்த்தி அதன் காரணம் என்னவென்று புரியாமல் அந்தப் பரசுராமனைக் கண்டு பயம் கொண்டு அவன் காலடியில் விழுந்தான் வணங்கினான்.

பரசுராமன் தசரதனைக் கண்டு கொள்ளாமல், இராமனுக்கு முன்பாக நின்று தனது வில்லை ஊன்றிக் கொண்டு வேகமாகப் பேசினான்.

"இற்றோடிய சிலையின் திறம்
அறிவேன், இனியான் உன்
பொற்றோள் வலி நிலை சோதனை
புரிவான் நசை உடையேன்
சொற்றோடிய திரள்தோள் உறு
தினவும் சிறிது உடையேன்
மற்றோர் பொருள் இலை இங்கிது
என்வரவு என்றனன் உரவோன்"

இவ்வாறு பரசுராமன் கூறியதைக் கம்பன் குறிப்பிடுகிறார்.

மிதிலையில் நீ வில்லை ஒடித்த சத்தத்தைக் கேட்டேன். அந்த வில்லின் வல்லமைப் பற்றி நான் நன்கு அறிவேன். இப்போது உன்னுடைய தோள் வலியை சோதனை செய்து காண்பதற்கு நேரில் உன்னைச் சந்திப்பதற்கு விரும்பி வந்துள்ளேன். நான் போர் செய்து வெகு நாட்கள் ஆகி விட்டன. எனது தோள்கள் அதனால் தினவு கொண்டிருக்கின்றன. அதுவே என் வரவுக்குக் காரணம் என்று பரசுராமன் கூறினான்.

அவ்வாறு பரசுராமன் கூறியவுடன் தசரத மாமன்னன் அச்சமும் அதிர்ச்சியும் அடைந்தான். பரசுராமனை அடிபணிந்து தசரதன் வேண்டினான்.

"புவனம் முழுவதும் வென்று ஒரு
முனிவர்க்கு அருள் புரிவாய்
சிவனும் அரி அயனும் அலர்
சிறு மானிடர் பொருளோ!
இவனும் எனது உயிரும் உனது அபயம் இனி
என்று கெஞ்சினான் அத்துடன்"

"விளிவார் விளிவது, தீவினை விழைவார்
உழை அன்றோ?
களியால் இவன் அயர்கின்றன
உளவோ? கனல் உமிழும்
ஒளிவாய் மழு உடையாய்! பொர
உரியாரிடை அல்லால்
எளியோர் இடை வலியார் வலி என்
ஆகுவ தென்றான்"

மிகுந்த அச்சத்துடன் தசரதன் முனிவரிடம் உலகம் முழுவதையும் நீ வென்று அதைக் காசிப முனிவருக்குத் தானமாகக் கொடுத்து அருள் புரிந்தவன் நீ. உன்னுடைய வல்லமைக்கு முன்பு சிவன், விஷ்ணு பிரம்மா ஆகிய மும் மூர்த்திகளும் ஒரு பொருட்டல்லர். நாங்கள் எம் மாத்திரம். நானும் எனது மகனும் எங்கள் உயிரும் உனக்கு அபயம்.

நீ கோபப்படுவது அதற்கு உரியவர்களிடமாக இருக்க வேண்டும் அல்லவா? தீச்செயல்களைச் செய்பவர்களிடமல்லவா இருக்க வேண்டும்? இந்த இராமன் ஒரு தவறும் செய்யவில்லை. செல்வச் செருக்காலும், அதிகார மமதையாலும், நன்மைகளைச் செய்வதை மறக்கவுமில்லை. ஒளிமிக்க மழு ஆயுதத்தைக் கொண்டிருக்கும் பரசுராமரே, உமக்குத் தகுதியானவர்களிடத்திற்குச் சென்று அவர்களை எதிர்த்துப் போர் செய்வதை விட்டுவிட்டு

எங்களைப் போன்ற எளியவர்களிடம் சண்டைக்கு வருவது நியாயமா? எளியோரை வலியார் வந்து மோதலாமா? என்று பரசுராமனிடம் காலில் விழுந்து தசரதன் அபயம் கேட்டான்.

தசரதன் பரசுராமனிடம் அபயம் கேட்டுப் பேசிய போது இராமன் தீவினைகள் எதுவும் செய்யவில்லை. செல்வச் செருக்கால், இராமன் தவறுகள் இழைத்துத் தனது அரசக் கடமைகளை மறந்து விடவில்லை என்றும் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. பரசுராமர் ஆயிரக்கணக்கில் க்ஷத்திரிய அரசர்களைக் கொன்று தீர்த்தவர் என்பது புராணச் செய்தியாகும். தீவினைகள் செய்த மன்னர்களும், செல்வச் செருக்காலும் அதிகார மமதையாலும் தனது அரசக் கடமைகளை மறந்த மன்னர்களும் தாங்கள் வல்லவர்கள் எனக் கருதி அகங்காரம் கொண்டிருந்த அரசர்களும் பரசுராமனுடைய மழுவாயுதத்திற்கு இலக்கானார்கள் என்னும் உண்மையும் வெளிப் படுகிறது.

அபயம் எனக் கூறி தன் கால்களில் விழுந்த தசரத மன்னனையும், அவன் கூறிய வார்த்தைகளையும் பரசுராமன் சட்டை செய்யவில்லை. அவர் இராமனைப் பார்த்தே பேசினார்.

பரசுராமன் இராமனிடம் பேசுகிறார், நீ மிதிலையில் ஒடித்த வில் முன்பே முறிவுபட்ட வில். இதோ என் கையில் உள்ள வில்லும் அதுவும் ஒன்றாகப் பிறந்தவை. அதைச் சிவபெருமானும் இதைத் திருமாலும் ஏந்திப் போர் புரிந்தனர். சிவபெருமான் வில் முறிந்தது. அதனை அவர் இந்திரனிடம் கொடுத்தார். அதுவே மிதிலையில் இருந்த வில். திருமால் தனது வில்லை இருசிக முனிவரிடம் தந்தார். அவர் அதை என் தந்தையிடம் அளித்தார். என் தந்தை அவ்வில்லை என்னிடம் கொடுத்தார். அதுதான் இந்த வில் என்று கூறி பரசுராமன் தன் கையில் இருந்த வில்லை இராமனிடம் நீட்டிப் பேசினான்.

"உலகெலாம் முனிவற்கு ஈந்தேன்.
உறுபகை ஒடுக்கிப் போந்தேன்

அலகில் மாதவங்கள் செய்து ஓர்
அருவரை இருந்தேன், ஆண்டைச்
சிலையை நீ இறுத்த ஓசை
செவியுறக் சீறி வந்தேன்
மலைகுவன் வல்லை ஆகின்
வாங்குதி தனுவை என்றான்''.

உலகில் உள்ள க்ஷத்திரிய மன்னர்களையெல்லாம் வென்று அந்தப் பூமியையெல்லாம் காசிப முனிவருக்குத் தானமாகக் கொடுத்து விட்டேன். என்னுடைய பகைவர்களையெல்லாம் ஒடுக்கினேன். அளவற்ற தவங்களைச் செய்து கொண்டு ஒரு மலையிலே அமைதியாகத் தங்கியிருந்தேன். அப்போது நீ மிதிலையில் ஒடித்த வில்லின் சத்தம் கேட்டுச் சீற்றம் கொண்டு வேகமாக உன்னிடம் வந்தேன். என்னுடன் போர் செய்வதற்கு உனக்கு வலுவும் துணிவும் இருக்குமாயின் இந்த வில்லை உன் கையில் வாங்கி வளைத்து நாண் பூட்டி என்னுடன் போர் செய்ய வருவாயாக என்று கூறினான். பரசுராமன் அவ்வாறு கூறியவுடன்,

''என்றனன் என்ன, நின்ற இராமனும்
முறுவல் எய்தி
நன்றொளிர் முகத்தன் ஆகி
நாரணன் வலியின் ஆண்ட
வென்றிவில் தருக என்னக்
கொடுத்தனன் வீரன் கொண்டு அத்
துன்று இரும் சடையோன் அஞ்சத்
தோள் உற வாங்கிச் சொல்லும்''

''பூதலத்து அரசையெல்லாம் பொன்று
வித்தனை என்றாலும்

வேத வித்தாய மேலோன் மைந்தன் நீ
விரதம் பூண்டாய்
ஆதலின் கொல்லல் ஆகாது
அம்பிது பிழைப்பது என்றால்
யாது இதற்கு இலக்கம் ஆவது?
இயம்புதி விரைவின் என்றான்

பரசுராமன் கூறியதைக் கேட்டு ஸ்ரீராமன் புன்முறுவல் செய்து முக மலர்ச்சியுடன் நாராணன் பெயரில் உள்ள அந்த வெற்றி வில்லைத் தருக என்று அந்த வில்லை வேகமாகக் கையில் வாங்கிச் சுலபமாக வளைத்துக் கணை தொடுத்தான். அதைக் கண்டவுடனே பரசுராமனுக்கு அச்சமும் ஆச்சரியமும் ஏற்பட்டது. அவனுடைய கைகள் தளர்ச்சியடைந்தன. வில்லை வளைத்து அம்பைத் தொடுத்துக் கல்யாணராமன் பேசினான்.

உலகிலுள்ள அரசர்களையெல்லாம் மடியச் செய்தாய் என்றாலும் வேதங்களையெல்லாம் முழுமையாகக் கற்றறிந்த மேலான வேதியன் ஜமதக்கினி முனிவனுடைய மைந்தன் நீ. அத்துடன் விரதம் பூண்டு தவ வேடத்தில் இருக்கிறாய். ஆதலால் உன்னைக் கொல்லக் கூடாது. ஆயினும் நான் தொடுத்துள்ள அம்புக்கு இலக்கு வேண்டும்.

இந்த அம்புக்குரிய இலக்கை நீயே விரைவில் கூறுவாயாக என்று கல்யாணராமன் பரசுராமனிடம் கேள்வியைப் போட்டான்.

பரசுராமர் பணிந்தார். கல்யாணராமன் மகாவிஷ்ணுவின் அவதாரமே என்பதை உணர்ந்தார். இனி உலகிற்குத் துன்பம் இல்லை. நான் தந்த இந்த வில் உன் வல்லமைக்குத் துணையாக இருக்கும்.

நீ தொடுத்துள்ள அம்பு பழுது பட வேண்டாம். என்னுடைய தவ வலிமை முழுவதையும் அந்த அம்பிற்கு இலக்காக்குகிறேன். அந்தக் கணை என் தவமனத்தையும் சிதைக்கட்டும் என்று தனது கைகளைத் தளர்த்தினான். கல்யாணராமனுடைய கணையும்

பரசுராமனுடைய தவ வலிமை அனைத்தையும் வாரிக் கொண்டு மீண்டது.

“பொன்உடை வனை கழல்
பொலங்கொள் தாரினாய்
மின்உடை நேமியான் ஆதல்
மெய்ம்மையே
என்உளது உலகினுக்கு இடுக்கண்?
யான் தந்த
உன்னுடைய வில்லும் உன்
உரத்துக்கு ஈடன்றால்”

“எய்த அம்பு இடைபழுது
எய்திடாமல் என்
செய்தவம் யாவையும் சிதைக்கவே எனக்
கை அவன் நெகிழ்ந்தனன்
கணையும் சென்று அவன்
மையறு தவம் எலாம் வாரி மீண்டதே”

என்று கம்பன் குறிப்பிடுகிறார்.

## எண்ணிய பொருள் எல்லாம் இனிது முற்றுக

“எண்ணிய பொருளெலாம் இனிது முற்றுக
மண்ணிய மணி நிற வண்ண! வண் துழாய்க்
கண்ணிய! யாவர்க்கும் களை கண் ஆகிய
புண்ணிய! விடை எனத் தொழுது போயினான்”

என்று கூறி பரசுராமன் கல்யாணராமனை வணங்கி அவனிடம் விடை பெற்றுக் கொண்டு அவ்விடத்திலிருந்து அகன்று மகேந்திர மலைக்குச் தவம் செய்வதற்காகச் சென்று விட்டான்.

பரசுராமன் போன பின்னர், இராமன் ஐம்புலன் உணர்வின்றிச் சோர்ந்து கிடந்தத் தன் தந்தையை எழுப்பித் துயர்க் கடலிலிருந்து கரையேற்றினான்.

பரிவும் இரக்கமும் இல்லாத அந்தப் பரசுராமனிடமிருந்து அந்த விஷ்ணு தனுசை வாங்கி அப்பரசுராமன் மீதிருந்த பழியை நீக்கிய இராமனை, தசரதன் கட்டித் தழுவி, உச்சி மோந்து மகிழ்ச்சியடைந்தான்.

இவ்வாறாக, கல்யாணராமன்–பரசுராமன் சந்திப்பு இராமாயண மகாகாவியத்தில் ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சியாகும். ஒரு நிலை மாற்றமாகும். ஒரு யுக சந்திப்பாகும். சமுதாய வளர்ச்சியில் ஒரு கட்டத்திலிருந்து அடுத்த கட்டத்திற்கு ஏற்படும் வரலாற்று மாற்றமாகும்.

இதிலிருந்து பிராமணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த பகையும், கசப்பும் நீங்குகிறது. ஒரு உடன்பாடும் சமரசமும் ஏற்படுகிறது. பரசுராமாவதாரத்தின் சக்தியனைத்தும் இராமாவதாரத்திற்கு முழுமையாக மாறுகிறது.

க்ஷத்திரியர்கள் அரசர்களாக நீடிக்கும் வகையில், பிராமணனான பரசராமனின் சக்தியனைத்தும் க்ஷத்திரிய குலத்தில் பிறந்த ஸ்ரீராமனிடம் வந்து சேருகிறது. அதன் பலனாக, வேதப் பயிற்சியும், தவ வலிமையும் அறிவாற்றலும் நிறைந்த அந்தணர்கள் அரசனுக்கு அவசியமான உரிய அமைச்சர்களாக இருந்து அரசனுக்குத் துணையாக இருக்கிறார்கள்.

அரசர்களும், அறிஞர்களும் சேர்ந்து நின்று சமுதாயத்திற்குத் தலைமையாகத் திகழ்கிறார்கள்.

சகல நற்குணங்களையும் சிறப்புகளையும் பெற்ற கல்யாணராமன் நாட்டிற்கும், காட்டிற்கும் சென்று பாரத நாட்டின் அனைத்து மக்களையும் ஒற்றுமைப்படுத்தி, இமயம் முதல் இலங்கை வரையிலுமான, கங்கை முதல் சேது வரையிலுமான, புண்ணிய பாரதமாக மலர்ந்த இராமராஜ்யம் என்னும் பெயரில் ஒரு நல்லாட்சி அமைகிறது.

எண்ணிய பொருள் எலாம்
இனிதே முற்றிற்று.

## நிறைவுரை

கல்யாணராமன்—பரசுராமன் சந்திப்பு பாரதத்தின் நீண்ட நெடிய வரலாற்றில் பாரதத்தின் இதிகாச வரலாற்றில் ஒரு முக்கியமான ஒரு மிக முக்கியமான நிகழ்ச்சியாகும்.

பாரத நாட்டின் பராக்கிரமம் க்ஷத்திரியர்களின் தோள்களில் பதிவாகியிருந்தது. க்ஷத்திரியர்கள் என்பவர்கள், குலத்தால் அல்ல, குணத்தால் வீரர்கள். அவர்கள் அரசர்கள், ஆட்சியாளர்கள், ஆட்சி அதிகாரம் படைத்தவர்கள்.

அரசர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும், அறிவுத்துறையும், அனுபவஞானத் துறையும், அரசியல் ஞானத்துறையும் சில கடமைகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது. அந்தக் கடமைகள் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் மேலும் மேலும் செழுமைப்பட்டு வந்திருக்கிறது. அந்தக் கடமைகளெல்லாம் இன்றுவரையிலுமான ஆட்சியாளர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் ஆட்சிப் பொறுப்பில் உள்ள அனைவருக்கும் பொருந்தும். அவர்கள் தங்கள் கடமைகளிலிருந்து தவறும்போது கண்டிக்கப்படுகிறார்கள், தண்டிக்கப்படுகிறார்கள், திருத்தப்படுகிறார்கள், மாற்றப்படுகிறார்கள். புதிய தலைமுறை வயதால் மட்டுமல்ல செயல்முறையிலும் பொறுப்புகளுக்கு வந்து அரசியல் கடமைகள் சீராக நிறைவேற்றப்படுகின்றன.

அரசியல் பிழைத்தோருக்கும் அல்லன செய்தோருக்கும் அறம் கூற்றாகும் என்பது சிலப்பதிகாரச் சொல்லாகும்.

நமது கதையில் வரும் கார்த்த வீரியார்ஜுனன் கடும் தவத்தாலும், விடா முயற்சிகளாலும் அளவு கடந்த அசுரபலத்தைப் பெறுகிறான். ஆயிரம் கரங்களின் வல்லமையைப் பெறுகிறான். அதனால் பெரும் அகம்பாவமும் அடைகிறான். தனக்குயாரும் நிகரில்லை என்று கருதுகிறான்.

அவன் தனது படைகளை ஏவி ஜமதக்கினி முனிவரின் ஆசிமத்தில் இருந்த காமதேனு என்னும் தெய்வீகப் பசுவை, அவருடைய வல்லமை மிக்க பிள்ளைகள் இல்லாதபோது வன்முறையாகக் கவர்ந்து, தனது நாட்டிற்குக் கொண்டு சென்று விடுகிறான்.

முனிவர், தனது பிள்ளைகள் வந்தவுடன் அவர்களிடம் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகிறார். ஜமதக்கினி முனிவரின் பிள்ளைகளில் ஒருவன் பரசுராமன். அவன் ஒரு மகா பராக்கிரமசாலி. அவனுடைய தெய்வீக ஆயுதம் பரசு (கோடலி). தனது தந்தை கூறிய செய்தியைக் கேட்டு ஆவேசம் கொண்ட பரசுராமன் தனது தெய்வீக ஆயுதத்துடன் கார்த்த வீரியார்ஜுனனுடைய நாட்டிற்குச் சென்று அரசனையும் அவனுடைய படைகளையும் எதிர்த்துப் போரிட்டு வல்லமைமிக்க கார்த்த வீரியார்ஜுனனையும் அவனுடைய படைகள் பலரையும் கொன்றுவிட்டு தெய்வீகப் பசுவை மீட்டிக் கொண்டு வந்து தனது தந்தையிடம் ஒப்படைத்துவிடுகிறான்.

ஜமதக்கினி முனிவர் தனது பசு திரும்பி வந்தது கண்டு மகிழ்ச்சியடைந்த போதிலும், கார்த்த வீரியார்ஜுனன் கொலை செய்யப்பட்டது கேட்டு மனம் வருந்தினார். அவர் தனது மகன் பரசுராமனிடம், அரசனைக் கொன்றது நியாயமில்லை. நீ பிராமணன். நீ ஆயுதம் எடுக்கலாம், ஆனாலும் உனது போர் அறவழியில் இருக்க வேண்டும். அரசன் க்ஷத்திரியன். நாட்டில் க்ஷத்திரிய நாசம் ஏற்பட்டுவிடக் கூடாது. அரசனைப் போரில் தோற்கடித்து பசுவை மீட்டியிருக்க வேண்டும். அறிவாற்றல் மூலம் ஆட்சி அதிகாரத்தை முறியடித்திருக்க வேண்டுமே தவிர அரசனைக் கொன்றல்ல. அரசனைக் கொன்றதால் உன்மீது பிரமஹத்தி தோஷத்தைப் போன்றதொரு தோஷம் ஏற்பட்டு விட்டது. புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று புண்ணிய துறைகள் ஆடி உன் பாவத்தைப் போக்கிவிட்டு வா என்று கூறித் தன் மகன் பரசுராமனை பாரத நாட்டைச் சுற்றி வர அனுப்பிவைக்கிறார்.

கார்த்த வீரியார்ஜுனன் கொல்லப்பட்ட பின்னர், அவனுடைய பிள்ளைகள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தனர். தங்கள் தந்தை கொல்லப்பட்டதற்குப் பழிக்குப் பழி வாங்க எண்ணங் கொண்டனர். அவர்களுடைய கோபமும் ஆணவமும் ஆவேசமும் அதிகமாகி, ஜமதக்னி முனிவரின் ஆசிரமத்திற்கு சமயம் பார்த்து ஆயுதங்களுடன் வந்து முனிவர் தியானத்தில் இருந்து கொண்டிருந்த போது, அவருடைய கழுத்தை வெட்டித் தலையை எடுத்துச் சென்று விடுகிறார்கள். புண்ணியத்துறைகள் ஆடப்போய் விட்டுத் திரும்பிய பரசுராமன் தனது தந்தையார் கழுத்து வெட்டப்பட்ட செய்தியைக் கேள்விப்பட்டு மிகுந்த ஆவேசத்துடன் மீண்டும் கார்த்த வீரியார்ஜுனனுடைய மக்கள் மீது படையெடுத்து அவர்கள் அனைவரையும் கொன்றுவிட்டு தனது தந்தையின் தலையை மீட்டிக் கொண்டுவந்து உடம்புடன் பொருத்தி தகனம் செய்து விட்டுச் சபதமேற்கிறான்.

அந்த சபதப்படி பரசுராமன் தவறு செய்த க்ஷத்திரியர்களை இருபத்தியொரு தலைமுறைகளின் அரசர்களைக் கொன்று அந்த அரசுகளையெல்லாம் காசிப முனிவர் என்னும் பிராமணரிடம் ஒப்படைத்து விட்டு அமைதியடைந்து மலைச்சாரலுக்கு தவம் செய்யச் சென்றுவிட்டார்.

அதனால் க்ஷத்திரியர்களுக்கும் பிராமணர்களுக்கும் அதாவது ஆட்சியாளர்களுக்கும், அறிவாளிகளுக்கும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் அரசியல் ஞானிகளுக்கும் இடையில் அடிப்படையில் பகையும் மனக் கசப்புகளும் ஏற்பட்டன.

பரசுராமன் கையில் அவருடைய தெய்வீக ஆயுதமான பரசுடன், விஷ்ணு தனுசும் இருந்தது. ஸ்ரீராமன் மிதிலையின் இருந்த சிவதனுசை வளைத்து ஒடித்த சப்தம் வனத்தில் மலையடிவாரத்தில் தவத்தில் அமைதியாக இருந்த பரசுராமனின் காதுகளில் விழுகிறது. மீண்டும் ஆவேசமடைந்து பரசுராமன் ஊழிக்காற்றின் வேகத்தில் தன் கையில் இருந்த விஷ்ணு தனுசுடன் ஓடோடி வந்து கல்யாணராமனை (க்ஷத்திரியனை) எதிர்த்து நிற்கிறான்.

பரசுராமன் ஆவேசத்துடன் வந்ததைக் கண்டு தசரதன் பயமும் பீதியும் அடைந்து பரசுராமனிடம் அடிபணிந்து, 'இராமன் எந்தத் தவறும் செய்யவில்லை. அவன் தனது அரசக் கடமைகளை மறந்தவனுமல்ல. கோபம் கொள்பவர்கள் மற்றும் தீச்செயல்களை விரும்பிச் செய்பவர்களிடம் தானே தாங்கள் கோபத்தைக் காட்ட வேண்டும்? செல்வச் செருக்காலும் அதிகார மமதையாலும் இராமன் தனது அரச கடமைகளையும் நன்மைகள் செய்வதையும் மறக்கவில்லை. மழுவாயுதம் கொண்டுள்ள மகா முனிவரே, நீர் போர் செய்வதற்கு வலுவுள்ளவர்களிடம் தானே செல்ல வேண்டும். எங்களைப் போன்ற எளியோர்களிடம் வரலாமா?' என்று கெஞ்சுகிறான்.

"விளிவார் விளிவது தீவினை
விழைவார் உழை அன்றோ?
களியால் இவன் அயர்கின்றன
உளவோ? கனல் உமிழும்
ஒளிவாய் மழுவுடையாய்!
பொர உரியாரிடை யல்லால்
எளியோர் இடை வலியார் வலி
என் ஆகுவ தென்றான்".

என்பது கம்பனுடைய பாடல்.

தசரதனுடைய கெஞ்சுதலை பரசுராமன் கொஞ்சம் கூடச் சட்டை செய்யவில்லை. இராமனுக்கு நேராக அவனெதிரில் நின்று உலகெலாம் முனிவற்கு ஈந்தேன், உருபகை ஒடுக்கிப் போந்தேன். அளவற்ற தவங்களைச் செய்து கொண்டு மலையடிவாரத்தில் இருந்தேன். நீ மிதிலையில் வில் ஒடித்த சப்தம் கேட்டு ஓடோடி வந்தேன். என் கையில் இருப்பது விஷ்ணு தனுசு. நீ ஒடித்த வில் முன்பே ஒடிபட்ட வில். இதோ உள்ள என் கை வில்லும் அதுவும் ஒன்றாகப் பிறந்தவை. அதைச் சிவபெருமானும், இதைத் திருமாலும்

ஏந்திப் போர் புரிந்தனர். சிவபெருமானுடைய வில் முறிந்தது. அதனை அவர் இந்திரனிடம் கொடுத்தார். அதுவே மிதிலையில் இருந்த வில். திருமால் தன் வில்லை இருசிக முனிவரிடம் தந்தார். அவர் அதை என் தந்தையிடம் அளித்தார். எந்தை அதை என்னிடம் கொடுத்தார். என்னுடன் போர் செய்ய உனக்கு வல்லமை இருந்தால் இந்த வில்லை வாங்கு பார்க்கலாம். என்று பரசுராமன் விஷ்ணு தனுசை நீட்டினான்.

கல்யாணராமன் புன்சிரிப்புடன் பரசுராமன் கையில் இருந்த விஷ்ணு தனுசைத் தனது கையில் வாங்கி சுலபமாக அதை வளைத்துக் கணையும் தொடுத்துவிட்டான்.

பரசுராமன் பணிந்தான். "இராமா! நீயே சக்கரப் படைகொண்ட திருமாலாகும். நீ மனிதனாக அவதரித்து அரச கடமைகளை, அரசியல் கடமைகளைச் செய்ய தொடங்கிவிட்டாய். இனி இந்த உலகிற்கு இடுக்கண்கள் (துன்பதுயரங்கள்) இருக்காது.

"நீ தொடுத்த அம்புக்கு எந்தப் பழுதும் இல்லாமல், என் தவபலம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு போய் உன்னிடம் சேர்த்துவிடும். எனது இந்த வில்லும் எனது தவபலமும் உனதாகட்டும்.

எண்ணிய பொருள் எல்லாம் இனிது முற்றுக என்று கூறி இராமனிடம் விடை பெற்றுக் கொண்டு, பரசுராமன் தான் முன் பிருந்த மலையடிவாரத்திற்குத் தவம் செய்யச் சென்றுவிட்டான். என் பதைக்கதையில் பார்த்தோம்.

கல்யாண ராமன் பரசுராமன் சந்திப்பு ஒரு யுக சந்திப்பாகும். இந்த நிகழ்ச்சிமூலம் பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் இடையில் இருந்த அதாவது அறிவாளிகளுக்கும், அரசர்களுக்கும் இடையிலான பகையும் கசப்பும் நீங்கியது. க்ஷத்திரியன் அரசனாகவும், பிராமணன் அமைச்சனாகவும் இருந்து தங்கள் கடமைகளை சீராக நிறைவேற்றி நல்லாட்சி நடத்தி மக்கள் அனைவரையும் ஒற்றுமைப் படுத்தி வழி நடத்திச் செல்கிறார்கள்.

சமுதாயம் மறுமலர்ச்சி பெறுகிறது. இராமராஜ்யம் தொடங்குகிறது. கல்யாண ராமனும் அவனுடைய வரலாறும் நமக்கு ஆதர்சமாக விளங்குகிறது.

நாமும் எண்ணிய பொருள் எலாம் இனிது முற்றுக என்று கூறி இந்நூலை நிறைவு செய்கிறோம்.

ஸ்ரீராமபிரானின் அருள் அனைவருக்கும் கிடைக்கட்டும்.

## நூலாசிரியரைப் பற்றி

நூலாசிரியர் : அ. சீனிவாசன்

நூலாசிரியர் திரு. அ.சீனிவாசன் ஒரு மூத்த தமிழறிஞர். எழுத்தாளர், பத்திரிகையாளர் முன்னாள் விமானப் படை வீரர். பல நாடுகளிலும், இந்தியாவின் பல மாநிலங்களிலும், விரிவாகச் சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தனது பள்ளிப் படிப்பு காலத்திலேயே பன்னிரண்டாவது வயது முதலே பொது வாழ்க்கையில் ஈடுபாட்டு நாட்டுப் பணிகளில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

சுதந்திரப் போராட்ட காலத்தில் தேசீய காங்கிரஸ், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி (1937 ம் ஆண்டில் ஜெயப் பிரகாஷ் நாராயணன் தலைமையிலான சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து காங்கிரஸ் சோஷலிஸ்டு கட்சி என்னும் பெயரில் ஒரு தீவிரமான கட்சி என்னும் பெயரில் ஒரு கட்சி அமைத்திருந்தனர். அக்கட்சியினர் காங்கிரஸ் கட்சியிலும் உறுப்பினர்களாயிருந்தனர்). சுயமரியாதை இயக்கம், பின்னர் பொதுவுடமை இயக்கம் ஆகிய இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றியவர், சிறை வாசம் சித்திரவதை, கொடுமையான போலீஸ் அடக்குமுறைகளுக்கு ஆளாகித் தியாகத் தழும்புகள் ஏறியவர்.

இரண்டாவது உலகப் பெரும் போர் காலத்தில் விமானப் படையில் சேர்ந்து இராணுவப் பயிற்சியும் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றவர்.

திரு. அ.சீனிவாசன் முன்னள் இராமநாதபுரம் மாவட்டம் இன்றைய விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, வத்திராயிருப்பு ஒன்றியம் மகாராஜபுரம் கிராமத்தில் விவசாய குடும்பத்தில் 1925–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6–ம் தேதி பிறந்தார். தந்தையார் மெட்ட.வெ.அய்யப்ப நாயுடு, தாயார் மெட்ட.வெங்கடம்மாள், உடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரி, இரண்டு சகோதரர்கள். 1957–ம்

ஆண்டு மே மாதம் 31–ம் தேதி திரு. அ.சீனிவாசன் அவர்களுக்கு திருமணம் ஆயிற்று. மனைவி திருமதி. சீ.நாகலட்சுமி குழந்தைகள் இரண்டு பெண்கள், ஒரு ஆண். பெண்களில் மூத்தவர் திருமதி. கே.பகீரதி எம்.ஏ.,பி.எட்.,(தமிழ்) திருமணமாகி விட்டது. சென்னையில் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இளையவர் கு.வைதேகி, கர்நாடக இசையில் பட்டம் பெற்று கோவையில் இசை ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மகன் ஏ.எஸ்.வாசன் (பழைய பெயர் எஸ். அய்யாசாமி) ஏரோநாட்டிக்கல் என்ஜினியரிங் மற்றும் பி.காம். படிப்பு முடித்தவர். சினிமா துறையில் தயாரிப்பு, நிர்வாகம், இயக்கம் ஆகிய துறைகளில் பணியாற்றி வருகிறார். அத்துடன் தந்தையார் எழுதி வரும் நூல்களைப் பதிப்பித்து அப்பதிப்பகத்தின் நிர்வாகியாகப் பணியாற்றியும் வருகிறார்.

திரு.அ.சீனிவாசன் மகராஜபுரம் சாத்தூர், வத்திராயிருப்பு விருதுநகர் ஆகிய ஊர்களில் பள்ளிப் படிப்பு முடித்து இந்திய விமானப் படையில் தகவல் தொழில் நுட்பப் பயிற்சியும் பெற்றுள்ளார். அப்போது ஆங்கில மொழியில் தனிப் பயிற்சியும் பெற்றார். அத்துடன் சொந்த முயற்சியில் தமிழ் இலக்கியத்திலும் குறிப்பாக பாரதி நூல்கள், கம்பராமாயணம், நாலாயிரத்திவ்யப் பிரபந்தம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் ஆழப்படிப்பும் பயிற்சியும் பெற்றார்.

இவ்வாறு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நல்ல பயிற்சியும் அத்துடன் தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகளும் அறிந்தவர்.

திரு. அ. சீனிவாசன் 1947–ம் ஆண்டு முதல் 1999–ம் ஆண்டு வரை சுமார் 52 ஆண்டுகள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில், அக்கட்சியின் வட்டாரப் பொறுப்பிலிருந்து, மாவட்ட, மாநில, அகில இந்தியப் பொறுப்புகள் வரையில் பல்வேறு பொறுப்புகளில் குறிப்பாக அமைப்பு நிலை, தொழிற் சங்கத்தலைமை, பத்திரிகைத்துறை, பிரச்சாரத்துறை, பிரசுரத்துறை, கட்சிக்கல்விப் பயிற்சித்துறை,

(சித்தாந்தத்துறை) முதலிய பல துறைகளிலும் பணியாற்றியுள்ளார். கட்சியின் உயர்ந்த அமைப்பான தேசீயக் கவுன்ஸிலில் இருபத்து ஐந்து ஆண்டுகள் உறுப்பினராக இருந்து, மாநில, மத்தியப் பொறுப்புகள் பலவற்றில் இருந்து பணியாற்றியுள்ளார். தமிழ் மாநிலக் குழுவின் துணைச் செயலாளர் பொறுப்பில் இருந்து மாநில அளவில் அமைப்பு நிலை, சித்தாந்தப் பயிற்சி, பத்திரிகை பொறுப்புகள் வகித்து இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

கட்சியின் உயர் மட்டக் குழுவின் பிரதிநிதியாக அன்றைய சோவியத்யூனியன் (ரஷ்யா–மாஸ்கோ, லெனின் கிராட், ஆர்மீனியா, ஆஜர்பைஜான்) மற்றும் செக்கோஸ்லோவேகியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்து சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

## தொழிற் சங்கத் தலைவராக

திரு.அ.சீனிவாசன் 1950–ம் ஆண்டு காலத் தொடக்கத்திலேயே இராஜபாளையம், சிவகாசி, சத்திரப்பட்டி, தளவாய்புரம், விருதுநகர், சாத்தூர், அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய பகுதிகளில் பஞ்சாலை, அச்சு, தீப்பெட்டி, கைத்தறி மற்றும் பல தொழில்கள் தொடர்பான தொழிலாளர் சங்கங்கள் பலவற்றையும் தொடங்கியும், உருவாக்கியும், தொழிற் சங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார். மாநில அளவிலும் பல தொழிற் சங்கப் பொறுப்புகளில் இருந்து பணியாற்றியுள்ளார்.

பின்னர் திரு.அ.சீனிவாசன் தனது தொழிற் சங்கப் பொருப்புகளில் சென்னைக்கு மாற்றப்பட்டு, சென்னையில் ஹார்பர், ஆவடி டாங்க் தொழிற்சாலை, கல்பாக்கம் அணுமின் நிலையம், ஆகிய துறைகளில், தொழில் நிறுவன அளவிலும், அகில இந்திய அமைப்பு வரையிலும், பொறுப்புகள் வகித்து தொழிற் கங்கத் தலைவராகப் பணியாற்றியுள்ளார்.

திரு.அ.சீனிவாசன் சென்னை டாக் லேபர் போர்டு உறுப்பினராக மத்திய அரசால் நியமனம் செய்யப்பட்டு அந்தப் பொறுப்பில் தொழிலாளர் பிரதிநிதியாக பணியாற்றியுள்ளார்.

## ஆய்வு அறிக்கை சமர்ப்பித்தல்

வளர்முக நாடுகளில் இளம் தொழிலாளர்களுக்கு மறுக்கப் பட்டுள்ள வாய்ப்புகள் என்னும் தலைப்பிலும், மற்றும் இளம் தொழிலாளர்களின் பொதுப் பிரச்சனைகள் பற்றியும், உலக தொழிற் சங்க சம்மேளத்தின் சார்பில் பல்கேரிய நாட்டில் வார்னா நகரில் நடைபெற்ற சர்வ தேசத் தொழிலாளர் மகாநாட்டில் இந்தியத் தொழிலாளர்களின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். அம் மாநாட்டில் இந்திய நாட்டின் இளம் தொழிலாளர்களின் பிரச்னைகள் பற்றிய அறிக்கை சமர்ப்பித்துள்ளார். அந்த அறிக்கை உலகத் தொழிலாளர் சம்மேளத்தின் ஆவணங்களின் பகுதியாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது.

1980–ம் ஆண்டுகளில் உலக தொழிற் சங்க சம்மேளமும், சமாதானம் மற்றும் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகளும் என்னும் சர்வதேச இதழும் சேர்ந்து நடத்திய கருத்தரங்கில் வளர்முக நாடுகளில் பொதுத்துறையின் பங்கும் பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் இடையிலான உறவு தொடர்புகள் பற்றிய பிரச்னைகள் பற்றி டில்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு.அ.சீனிவாசன் இந்தியாவில் பொதுத்துறைக்கும் தனியார் துறையில் உள்ள நடுத்தர மற்றும் சிறு தொழில்களுக்கும் இடையிலான உறவு என்னும் தலைப்பில் ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பித்து, அது உலக தொழிற் சங்க ஆவணத்தில் பதிவாகியுள்ளது.

## பத்திரிகையாளராக

தொழிற் சங்கத் தலைவராக இருந்த காலத்தில் தொழிற் சங்கச் செய்தி ஹார்பர் தொழிலாளி ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியர் பொறுப்பில் பணியாற்றியுள்ளார். கட்சியின் மாநிலத் துணைத் செயலாளராக இருந்த போது கட்சியின் மாநில அமைப்பு நிலைப் பொறுப்பில் இருந்த காலத்தில் கட்சியின் பத்திரிகையான ஜன சக்தி வார இதழ் மற்றும் நாளிதழ்களில் தலைமை ஆசிரியராக

எட்டாண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார். கட்சியின் சித்தாந்த ஏடான மார்கசீய ஒளி மாத இதழின் தலைமை ஆசிரியராக இருபது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ளார்.

## எழுத்துப் பணிகளில்

பத்திகை ஆசிரியராக இருந்த காலத்தில் கட்சி மற்றும் தொழிற் சங்கப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாகப் பல முக்கிய அரசியல், பொருளாதாரம், இலக்கியம் மற்றும் தத்துவ ஞானம் மற்றும் தொழிலாளர், விவசாயிகள் பற்றியப் பிரச்னைகள் பற்றிய பல கட்டுரைகள் எழுதி வந்ததுடன்,

அரசியல், வரலாறு, பொருளாதாரம், தத்துவஞானம், சர்வதேசப் பிரச்னைகள் முதலியவை பற்றிய பல தலைப்புகளிலான நூல்களை மொழி பெயர்ப்பு (தமிழாக்கம்) செய்தும், மூல நூல்கள் எழுதியும் அவை வெளியாகியுள்ளன. காரல் மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு, மார்க்சிய லெனினிய தத்துவ ஞானப் பிரச்னைகள் அரசியல் விஞ்ஞானத்தின் அடிப்படைகள், ஐக்கிய முன்னணித்தந்திரம், மார்க்சீய தத்துவம், வரலாற்றியல் பொருள் முதல் வாதம், மார்க்சீயமும் பகவத் கீதையும் முதலியன அவர் தமிழாக்கம் செய்துள்ள முக்கியமான பெரிய நூல்களாகும். மற்றும் மார்க்சீய பொருளாதார தத்துவம், ஜீவாவின் தமிழ் பணிகள், கிராமப்புறப் பாட்டாளிகளை நோக்கி ஆகிய தலைப்புகளில் மூல நூல்கள் எழுதியுள்ளார். இந்த மூன்று நூல்களுக்கும் முறையே பேராசிரியர் வான மாமலை பேராசிரியர் சஞ்சீவி, பேராசிரியர் நா. தர்மராஜன் ஆகியோர் முன்னுரை எழுதி பாராட்டியுள்ளனர். இவ்வாறு திரு.அ.சீனிவாசன் அப்போது எழுதி வெளியான நூல்கள் சுமார் பதினேழாயிரம் பக்கங்களுக்கு மேலாகும். இவை திரு.அ.சீனிவாசன் அவர்களுடைய எழுத்துப் பணிகளில் அமைதியான சாதனையாகும்.

## **விருதுகள்**

திரு, அ. சீனிவாசன் தனது சிறந்த எழுத்துப் பணி சாதனைகளுக்காக சோவியத் நாடு நேரு விருதும், சிறந்த

பத்திரிகைப் பணிகளுக்காக, சமாதானம் சோஷலிஸம் பற்றிய பிரச்னைகள் என்னும் சர்வதேசப் பத்திரிகை நிறுவனத்தின் சார்பில் சிறந்த பத்திரிகையாளர் என்னும் கௌரவப் பட்டயமும் பெற்றுள்ளார். அத்துடன் அண்மையில் பாரதி தொடர்பாக அவர் எழுதியுள்ள நூல்களும் தனியார் விருதுகளைப் பெற்றுள்ளன.

## தேர்தல்களில் பங்கு

1950–ம் ஆண்டுகளின் கடைசியில் திரு. அ. சீனிவாசன் இராஜபாளையம் நகரசபைத் தேர்தலில் வார்டு உறுப்பினர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நகரசபை உறப்பினராகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

1984–ம் ஆண்டிலும் 1991–ம் ஆண்டிலும் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல்களில் சிவகாசி பாராளு மன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவுடன் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக திரு. அ. சீனிவாசன் போட்டியிட்டு ஒவ்வொரு தடவையிலும் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்று குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார். இருதடவைகளிலும் முறையே இந்திரா காந்தி படுகொலை, ராஜீவ் காந்தி படுகொலை அதனால் ஏற்பட்ட அனுதாப அலை அவருக்கு பாதகமாக இருந்தது.

திரு. அ. சீனிவாசன் சிறந்த சிந்தனையாளர், எழுத்தாளர், பத்திரிகையாளர், நூலாசிரியர், சிறந்த பேச்சாளர், இராணுவ சேவை அனுபவம் பெற்றவர். தொழிற்சங்கத் தலைவராகப் பணியாற்றி அனுபவம் பெற்றவர். பல நாடுகளுக்கும், இந்திய நாட்டில் பல மாநிலங்ககளுக்கும் சென்று சுற்றுப் பயணம் செய்து அனுபவம் பெற்றவர். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், இந்தி ஆகிய மொழிகள் அறிந்தவர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் 1948–50ம் ஆண்டு காலத்தில்

கடுமையான போலிஸ் அடக்கு முறைக்கும் சித்திரவதைக்கும் கொடுமையான சிறைவாசத்திற்கும் உட்பட்டு மதுரை, சேலம் சிறைகளில் கடும் தண்டனை அனுபவித்து தியாகத் தழும்புகள் ஏறியவர்.

## இலக்கிய அனுபவம்

திரு. அ. சீனிவாசன் ஏற்கனவே தனது குழந்தைப் பிராயத்திலிருந்தே தனது தாய் தந்தையர் மூலம் இராமாயணம், மகாபாரதம் நாலாயிரத் திவ்யப் பிரபந்தம், நளவெண்பா, இராமனுஜருடைய தத்துவங்கள் முதலியவை பற்றி அறிமுகமானவர். விடுதலை இயக்கத்தின் ஆதர்சத்தில் பள்ளிப் படிப்புகாலத்தில், மகாகவி பாரதியார், வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா, விவேகானந்தர் நூல்கள், அவர்களைப் பற்றிய செய்திகள், ஆனந்த மடம் முதலிய பங்கிம் சந்திரர், மற்றும் சரத் சந்திரர் நாவல்கள், கல்கி நாவல்கள், மணிக் கொடி கதைகள் முதலிய இலக்கியங்களிலும் அறிமுகமாகி நாட்டுப்பற்றை வளர்த்துக் கொண்டவர். சுதந்திரப் போராட்ட காலத்தில் தீவிர வாதக் கருத்துக்களுக்கு ஆதரவான சிந்தனைப் போக்குகளைக் கொண்டிருந்தார். பாரதி, விவேகானந்தர், ஆகியோரின் இந்திய சிந்தனைப் போக்கு அவரை மிகவும் கவர்ந்தது. அதன் பெருமி தத்தை படிப்படியாக வளர்த்துக் கொண்டிருந்தார்.

திரு. அ. சீனிவாசன், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டபோது கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் குறிப்பாக மார்க்ஸ், ஏங்கல்ஸ், லெனின் மற்றும் சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களின் மூல நூல்களை ஆழ்ந்து படித்தார். அப்போது, இயற்கை, சமுதாயம் தனி மனித சிந்தனை பற்றியும் அதன் வழியில் தத்துவ ஞானம், அரசியல் பொருளாதாரம் சமுதாய வரலாறு பற்றியுமான ஐரோப்பிய சிந்தனைகள், ஐரோப்பாவில் நிகழ்ந்த தீவிரமான கருத்துப் போராட்டங்கள், தொழில் புரட்சி மூலம் நிகழ்ந்த சமுதாய மாற்றங்கள் முதலியவை பற்றிய இலக்கியங்கள் மூலம் ஐரோப்பிய சிந்தனை வளர்ச்சி பற்றிய அறிமுகம் ஏற்பட்டது.

அத்துடன், சோவியத் யூனியனின் தோற்றமும் வளர்ச்சியும் சர்வ தேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஆவணங்கள் தொடர்ச்சியான அறிக்கைகள் தீர்மானங்கள் ஆகியவற்றையும் ஆழ்ந்து படிக்க நேர்ந்தது. சீனாவின் கம்யூனிஸ்ட் இலக்கியங்களையும் படிக்க நேர்ந்தது.

இந்திய நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், நாட்டின் வளர்ச்சிக்கான பாதை எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பது தொடர்ச்சியான விவாதப் பொருளாக இருந்து வந்திருக்கிறது. இதில் ஆங்கில (ஐரோப்பிய) சிந்தனைப் போக்குகளுக்கும் இந்திய சிந்தனைப் பொக்குகளுக்கும் இடையில் அடிப்படையான மோதல் இருந்து வந்திருக்கிறது. இந்த மோதலில் பல பெரிய அரசியல் கட்சிகளும் கூட பிளவுபட்டு உடைந்திருக்கின்றன. சுதந்திரம் அடைந்தபோது இந்திய நாடும் உடைந்து, இந்தியா, பாகிஸ்தான் பின்னர் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் எனப்பிரிந்து பிளவுபட்டிருக்கின்றன.

இந்திய நாட்டின் வெளி உறவுக் கொள்கை, இந்திய நாட்டின் ஒற்றுமை ஒருமைப்பாடு, இந்திய மக்களின் ஒற்றுமை, நாட்டின் தற்காப்பு பலம், இந்திய நாட்டின் தொழில் வளர்ச்சி விவசாயப் பிரச்சனை, உற்பத்திப் பெருக்கம், மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், கல்வி, கலாச்சார முன்னேற்றம், மக்களின் சுகாதாரம் நல்வாழ்வு பல துறைகளிலும் நாட்டின் ஒன்றிணைப்பு இந்திய மக்களின் ஆன்மீக பாரம்பரியத்தின் மேன்மை, ஒட்டுமொத்தமான அரசியல், பொருளாதார, சமுதாய, கலாச்சார, ஆன்மீக வளர்ச்சி பற்றிய பலவேறு பிரச்னைகளும் எழுந்து அவைகளுக்குச் சரியான தீர்வு காண்பதில் இந்திய மக்களிடையில் நூறாண்டு காலத்திய ஆங்கிலக் கல்வி மூலம் ஏற்பட்ட மேலைநாட்டு சிந்தனைப் போக்குகளும், இந்திய பாரம்பரியத்தின் தொடர்ச்சியான இந்திய சிந்தனைப் போக்குகளும் எழுந்து அவை மோதியிருக்கின்றன. இன்னும் அது தொடர்கிறது.

திரு. அ. சீனிவாசன் தன்னுடைய ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலான பொது வாழ்க்கை, பத்திரிகைப் பணிகள், தொழிற்சங்க இயக்கப் பணிகள், விவசாயிகளின் போராட்ட அனுபவங்கள் ஐந்தாண்டு திட்டங்களின் வளர்ச்சிப் போக்குகள் பற்றிய படிப்பு, இந்திய நாட்டின் அரசியல் வளர்ச்சி ஆகியவற்றின் அனுபவத்தில் தான் அதுவரை பணியாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சித்தாந்த சிந்தனை, அரசியல் கொள்கைகள் அவைகளின் செயல்பாடு, அமைப்பு நிலைப்பணிகள், அணுகும் முறை ஆகிய பல பிரச்னைகளிலும் தனக்குச் சொந்தமான கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அக்கட்சியிலிருந்து விலகி **1999**–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதிய ஜனதாக் கட்சியில் சேர்ந்து அக்கட்சியின் தலைமையின் கீழ் சமுதாயப் பணி ஆற்றிவருகிறார். ஒரே நாடு பத்திரிகை, மற்றும் விஜய பாரதம் ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியும் எழுதியும் வருகிறார்.

அத்துடன் சொந்தமாகவும், பாரதி, கம்பன், சிலப்பதிகாரம், திவ்யப் பிரபந்தம் தொடர்பான பல நூல்களும் எழுதியும் பதிப்பித்தும் வெளியிட்டும் வருகிறார். அதன்படி பாரதப் பண்பாட்டு தளத்தில் பாரதி, பாரதியின் புதிய ஆத்திசூடி. ஒரு விளக்கவுரை, சிலப்பதிகாரத்தில் வைதீகக் கருத்துகள், ஆகிய நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இந்த நூல்கள் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கு உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றிருக்கிறது.

அத்துடன் திரு. அ. சீனிவாசன் எழுதிய சிலப்பதிகாரமும் திவ்யப் பிரபந்தமும்–ஒரு ஆய்வு என்னும் நூலை பிரபல புத்தக வெளியீட்டு நிறுவனமான பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டிருக்கிறது.

மேலும் திரு. அ.சீனிவாசன் எழுதி முடித்து அச்சில் உள்ள, ஆழ்வார்களும், பாரதியும், பாரதியின் தேசீயம், கம்பன் ஒரு சமுதாயப் பார்வை, கம்ப நாடன் காவியத்தில் காதலும் பெருங்காதலும், கம்பன் காவியத்தில் விதியின் பிழையும் அறத்தின் வெற்றியும் என்னும் நூல்கள் விரைவில் வெளிவரவுள்ளன.

மேலும் பாரதி, கம்பன் தொடர்பாக வேறு சில நூல்களும், கிராமங்களை நோக்கி, இந்தியப் பொருளாதார சிந்தனைகள், பாரதியும் பகவத் கீதையும் முதலிய நூல்களும் எழுதிக் கொண்டு வருகிறார். பாரதி தொடர்பாக பல நூல்களை எழுதியும் பாரதி புகழ் பரப்புவதில் பங்கு கொண்டும் வருவதால் திரு. அ. சீனிவாசன் பாரதிய ஜனதா கட்சி வட்டாரத்தில் பாரதி சீனிவாசன் என்று அழைக்கப்பட்டு வருகிறார்.